சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol.13 No. 40 1-11-'42 Price 2 Annas

குழந்தைப்பருவத்தில்

முக்கியமான சுகத்தைத் தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

குழந்தைக்கு

ஆரோக்யத்தைத் தரும்.

WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON. ENGLAND

சென்றவார நிகழ்ச்சிகள்

இந்தியா சட்ட சபைக்கு தஞ்சை-திருச்சி தொகுதியின் பிரதிநிதியாகப் பொறுக்கி எடுக்கப்பட்டிருக்கும் ஸ்ரீமான் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்.

ராஜாஜி திட்டம்

புதிய டில்லிக்கு சமீபத்தில் விஜயம் செய்த ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் பல நிருபர்களுக்குப் பேட்டியளித்தார்.

தமது திட்டத்தை விவரிக்கும்படி பத்திரிகை நிருபர்கள் கேட்கவே ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் பின்கண்ட விதம் தெரிவித்தார்:—

இந்நெருக்கடியான காலத்தில் இங்கிலாந்தில் மன்னர் பிரான் எத்தகைய ஸர்க்காரை அமைப்பாரோ அதே போல் இந்த நாட்டிலும் வைஸ்ராய் மூலமாக பிரிட்டிஷ் ஸர்க்கார உடனே ஒரு ஸர்க்காரை அமைக்க வேண்டும் பொது ஜனங்களின் நம்பிக்கைக்கும், பிரீதிக்தும் பாத்திரமாக இருப்பவர்களை வைஸ்ராய் தேர்ந்தெடுத்து அவர்களை ஸர்க்காரை நடத்தும்படி கேட்கவேண்டும். இப்பொழுது சரியான வகையில் சட்டசபை அமைந்தில்லை என்பது உலகப் பிரசித்தமானது: ஆனல் இபபொழுது தேர்தல் நடத்தினால் எத்தகைய சட்டசபை அமையும் என்பதும் வைஸ்ராய்க்கு நன்ருகத் தெரியும், புதிய வகையான சரியான முறையில் அமைந்த சட்டசபையைச் சமாளிக்கக்கூடிய ஸர்க்காரை நடத்துவதற்குப போதிய பின்பலத்துடன் கூடியவர்களை வைஸ்ராய் தெரிந்தெடுக்கலாம். இத்தகைய ஸர்க்காரை உடனே அமைத்துவிட வேண்டும்; அப்புறம் தேர்தல் நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மாகாணங்களில் தேர்தல் நேரடியான முறையில் நடக்க வேண்டும். பிறகு மாகாண சட்டசபைகளிலிருந்து மத்ய சட்டசபைக்குப் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கலாம்.

இந்தச் சமயத்தில் தேர்தல் நடத்துவதென்பது ஆகாதகாரியம் என்று பொதுவாகக் கருதபபடுகிறது. இதற்குக் காரணமே இல்லை. நான் பிரஸ்தாபித்து வரும் தேசிய ஸர்க்கார் மேலே நான் கூறிய சட்ட சபைக்கு ஜவாப்தாரியானதாக இருக்க வேண்டும்; அத்தகைய சட்டசபைக்கு உடனே ஏற்பாடு செய்ய வேண்டும்.

எந்த இடத்தில், எந்தச் சமயத்தில் தேர்தல் நடத்தினாலும், கண்டிப்பாக ஜயித்துவிடக்கூடுமென்றும், நாடு பூராவுமுள்ள மக்களின் அபிமானத்தைப் பெற்றவர்களென்றும் வைஸ்ராய் நினைக்கும் முக்கியமான ஐந்து காங்கிரஸ்காரர்களைச் ஸர்க்கார் தெரிந்தெடுப்பது முடியாத காரியமா? இந்த ஐவரில் இப்பொழுது சிறையிலிருப்பவர்களும் இருப்பார்களென்பதில் துளியும் சந்தேகம் வேண்டாம்.

அப்பால் ஜனப் ஜின்னாவைச் சேரும்படி வைஸ்ராய் அழைக்க வேண்டும். தமக்கு எத்தனை பேர் வேண்டுமோ அத்தனை பேர்களை அவர் தெரிந்தெடுத்துக் கொள்ளலாம். இத்தகைய ஸர்க்காரை அமைப்பதன் மூலம் பாகிஸ்தான் பிரச்னை முன்னதாகவே முடிவு செய்யப்பட்டு விடுமென்று ஜனப் ஜின்னா அஞ்சுவதைச் சமாளிக்கவே இந்த யோசனை. பிரிட்டிஷாரிடமிருந்து உண்மையில் அதிகாரம் மாறினால் பூரா ஸர்க்காரையும் ஜனப் ஜின்னாவின் பொறுப்பில் விட்டுவிட தாம் தயாரென்று காந்திஜீ வியக்தமாகக் கூறியிருப்பதற்கு இணங்கவே இந்த யோசனை இருக்கிறது.

* * * *

சிட்டகாங்கில் எதிரித் தாக்குதல்

சென்ற மாதம் 25-ந்தேதியன்று சிட்டகாங் விமானக் கூடத்தையும் வடகிழக்கு அஸ்ஸாமிலுள்ள சில விமானக் கூடங்களையும் எதிரி விமானம் தாக்கியதாக ஒரு அறிக்கை கூறுகிறது.

இதனுல் ஏற்பட்ட ராணுவ பொதுஜன ஆள் சேதமும் சொத்துச் சேதமும் மிகச் சொற்பமாக இருப்பதாக இதுவரை வந்த தகவல்களால் தெரிகிறது.

தாக்குண்ட பிரதேசங்களிலுள்ள ஸிவில் தொழிலாளர் மிக்க தைரியத்துடனும் கட்டுப்பாடுடனும் நடந்துகொண்டனர். அவர்கள் தங்களுடைய வேலைகளை மிக்க விசுவாசத்துடன் செய்தனர்.

* * * *

ஸிந்து மந்திரிகள் வீட்டுமுன் மறியல்

சென்ற மாதம் 23-ந் தேதி ராஜவிசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொண்டு பதவி ஏற்ற இரண்டு ஹிந்து மந்திரிகளாகிய ராய்சாகிப் கோகல்தாஸ், டாக்டர் ஹேமந்தாஸ் இவர்கள் வீட்டு வாசலில், அன்று காலை மறியல் ஆரம்பித்தது. மறியல் செய்த முதல் கோஷ்டியினர் சுமார் 6—மணிக்கு வந்து சேர்ந்தனர்.

கைதியானவர்களின் தொகை 41. ராய்சாஹிப் கோகல்தாஸ் வீட்டு வாசலில் 4 ஸ்திரீகள் உள்பட 34 பேர் கைதியாயினர். மந்திரி ஸெகரடேரியட்டுக்குப் போய்விட்டதும் மறியல் நின்றது.

டாக்டர் ஹேமந்தாஸின் வீட்டு முன்பும் அவருடைய ஆஸ்பத்திரிக்கு முன்பும் 6 ஸ்திரீகள் உள்பட, பலர் கைது செய்யப்பட்டனர்.

* * * *

சீனத் தலைவருக்கு மகாத்மா கடிதம்

சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பிப்பதற்கு முன் மகாத்மா காந்தி ஜெனரல் சியாங் கேஷேக்குக்கு எழுதிய கடிதத்தை ஆசிரியர் மிஸ்டர் லூயி பிஷர் இவ்வார 'நேஷன்' பத்திரிகையில் பிரசுரித்திருக்கிருர். அதில் மகாத்மா காந்தி எழுதியிருப்பதாவது:—சீனவின் பால் நான் கொண்டுள்ள உணர்ச்சியினுலும், பரஸ்பர அனுகூலத்தை உத்தேசித்து இவ்விரு பெரிய தேசங்களும் ஒன்றுக்கொன்று நெருங்கி ஒத்துழைக்க வேண்டுமென்ற எனது மனப்பூர்வமான விருப்பத்தினுலும் பிரிட்டிஷ் ஆதிக்கம் இந்தியாவை விட்டு மறைய வேண்டுமென்று நான் கூறியது சம்பந்தமாக உங்களுக்கு விஷயங்களை விளக்கிக் கூற விரும்புகிறேன். பிரிட்டிஷ் ஆதிக்கம் மறையவேண்டும் என்று நான் கூறியதால் ஜப்பானியரை எதிர்த்து நிற்பதற்கு இந்தியாவுக்குள்ள பாதுகாப்பைப் பலவீனப்படுத்தும் உத்தேசமோ அல்லது உங்களது போராட்டத்தில் உங்களுக்கு சங்கடத்தை விளைவிக்கும் உத்தேசமோ இல்லை. உங்கள் தேசத்தின் சுதந்திரத்தைக் கெடுத்து என் தேசத்து சுதந்திரத்தைப் பெறும் குற்றத்திற்கும் நான் ஆளாகமாட்டேன். நான் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டாலும், அது சீனவைப் பாதிக்காது. இந்தியாவிலோ சீனவிலோ ஜப்பானியரின் தாக்குதலுக்கும் அது ஆதரவோ ஊக்கமோ அளிப்பதாக விருக்காது.

* * * *

மிஸ்டர் அமெரி சமாதானம்

'வைஸ்ராய் நிர்வாக சபையில் இன்னும் மூன்று ஐரோப்பியர் வகித்து வரும் பதவிகளுக்கும் இந்தியரை நியமித்து அச்சபையை முற்றிலும் இந்திய மயமாக் காததேன்'? என்று ஒரு அங்கத்தினர் காமன்ஸ் சபையில் கேட்டார்.

இந்தியா மந்திரியான மிஸ்டர் அமெரி பின்வருமாறு பதிலளித்தார்:—யுத்த நிலைமையைச் சமாளிப்பதற்காகத் தமது நிர்வாக சபையினரின் தொடர்ச்சியான, திறமையான ஆதரவைப் பெறும் பொருட்டே வைஸ்ராய் அந்த சபையை விஸ்தரித்தார். தற்போதைய வேலைக்கு மிகவும் லாயக்கான அங்கத்தினர்கள் அச்சபையில் இருக்கின்றனர் என்பதில் சந்தேகமில்லை.

அச்சபையில் தற்போது சில ஐரோப்பிய அங்கத்தினர்களை வைத்துக் கொண்டிருப்பதற்கும் காரணம் அப்பதவிகளுக்குத் தக்க இந்தியர் கிடைப்பதிலுள்ள கஷ்டம் தான். ஐரோப்பிய ஜாதியினர் என்பதற்காக அதைச் சேர்ந்த மூவரை அச்சபையில் வைத்துக் கொண்டிருக்கவில்லை. எந்த ஒரு குறிப்பிட்ட பதவிக்கும் ஜாதியைக் காரணமாகக்கொண்டு நியமனம் செய்யப்படவில்லை.

* * * *

சிறையிலுள்ள தலைவர்கள்

காந்திஜியைப் பார்க்க டாக்டர் மூஞ்ஜேக்கு வைஸ்ராய் அனுமதி மறுத்தது பற்றி காமன்ஸ் சபையில் ஒரு கேள்வி கேட்கப்பட்டது

"தற்போதைய நிலைமையில் காங்கிரஸ் தலைவர்களை யாரும் கண்டு பேசுவதற்கு அனுமதி கொடுக்க நான் தயாராயில்லை", என மிஸ்டர் அமெரி பதில் அளித்தார்.

'கிரிப்ஸ் யோசனை பற்றிக் காங்கிரஸ் செய்த முடிவானது அந்த ஸ்தாபனத்தினர் தாராளமாகக் கலந்து பேசி ஓட் செய்ததன் விளைவா; அல்லது காந்திஜியின் நிர்ப்பந்தத்தின் பலனு'? என்று ஒரு அங்கத்தினர் கேட்டார்.

மிஸ்டர் அமெரி:—எனக்குத் தெரியாது. ஆனல் பிறகு ஏற்பட்ட நிகழ்ச்சிகளிலிருந்து ஸ்ரீ ராஜகோபாலாச்சாரி அந்த முடிவை ஆடசேபித்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது.

* * * * *

எகிப்தில் யுத்தம்

நேச அதிகாரிகள் சென்ற மாதம் 24-ந்தேதி வெளியிட்ட அறிக்கையில் கூறியதாவது:—

எகிப்திலுள்ள (8-வது) பிரிட்டிஷ் படை நேற்றிரவு விசேஷ விமான உதவியுடன்

(அடுத்த பக்கம் பாக்க)

இந்த இதழில் இருப்பவை

★

ராஜாஜியின் கக்ஷி	(ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்)
சீவகனும் தோழரும்	(சீவக சிந்தாமணிக் கதை)
மாப்பிள்ளை மிடுக்கு	(சிறு கதை)
போஸ்ட் ஆபீஸ்	(குஜராத்திக் கதை)
வாடா மலர்	(புதிய தொடர் கதை)
குட்டிக் கதை	('ரேவதி')
சித்திரமும் சிருங்காரமும்	(சினிமாப் பகுதி)
ஜோதிர்மண்டலம்	(விசாகம்)
கள்வனின் கருணை	(சிறுவர் கதை)

ராஜாஜியின் கட்சி

ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன் எழுதியது

டில்லியில் ராஜாஜி பத்திரிகை நிருபர்களைக் கண்டு பேசியிருக்கிருர். கல்கத்தாவில் அவர் பேசியது அறைகுறையாக வெளியாயிற்று. படித்தவர் தப்பபிப்பிராயம் கொள்ள இடங்கொடுத்தது; முடிவு காணும் சிரத்தையில் முக்கியமான அம்சங்களை மழுப்பி விட்டாரோ என்ற சந்தேகம்! சந்தேகத்திற்கு இடமில்லாமல் டில்லியில் பேசியிருக்கிருர்; நிலைமை திருந்த உருவான யோசனை வெளியிட்டிருக்கிருர்; அனுபுவ சாத்தியமான வழியில் வகுத்திருக்கிருர். "திருந்துவதில் சிரத்தையுண்டானுல் பாக்கி விவரங்களையும் வெளியிடத் தயார். வேண்டி, வசதியளித்தால், சீமைக்குச் சென்று சந்தேகங்களைத் தீர்க்கிறேன்" என்கிருர்.

பிரபுக்கள் சபையில் நடந்த விவாதம் அவருக்குச் சற்று தைரியம் கொடுத்திருக்கிறது. வழக்கப்படி அங்கே வாதம் நடக்கவில்லை. கவர்ன்மெண்ட் சார்பில் பேசியவர் தொனி திட்டமாயில்லை. எங்கும் கிளம்பி வரும் புகார் உறுத்த ஆரம்பித்திருக்கிறது; எடுத்துவரும் நடவடிக்கை எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை. சபையிலேயே கண்டனக் குறிகள் காணக்கிடந்தன. வலுவில்லாத கக்ஷிக்கு சப்பைகக்கட்டுக் கட்டுவது சிரமமாகி விட்டது. உதவி இந்தியா மந்திரிக்கு அநுபவம் போதவில்லை. கண்ணுடி வீட்டிலிருந்து கல்லெறியப் புறப்பட்டார். கவர்ன்மெண்ட் தரப்பில் கடைசியாகப் பேசிய லார்டு ஸைமன் பிடிவாதத்தையே பலமாகக் கொண்டார். தாம் கண்டதும் கொண்டதும், அசைக்க முடியாத உண்மைகள் என்ற பிரமை அவருக்கு.

மொத்தத்தில் வாதம் கவர்ன்மெண்டுக்கு பலம் காட்டியதாகவோ கட்டியதாகவோ சொல்லிக் கொள்வதற்கில்லை. இந்தியப் பிரச்னை தீர, இந்தியர் முனைய வேண்டும்: இந்தியர் முடிவை ஏற்கத் தயார் என்பது கவர்ன்மெண்டின் கக்ஷி. அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார் ராஜாஜி. "இது உறுதியானுல் வழி இதோ இருக்கிறது" என்கிருர். "இடைக்காலக் கவர்ன்மெண்டை இவ்வாறு அமையுங்கள்: அதற்குப் பொறுப்பேற்ற தேர்தல் நடத்துங்கள்; அதிகாரத்தை அதனிடம் ஒப்படைத்துப்பாருங்கள்" என்கிருர் ராஜாஜி. தேர்தல் நடத்துவதில் சிரமமில்லை. கலவரத்தை அடக்குவதில் மெனக்கிடுவதைக் காட்டிலும் அது மேல். தேர்தல் மக்கள் மனதைத் திருப்பவும் உதவும்: கலவரம் தானுக அடங்கி விடும்; பிரிந்து கிடக்கும் கக்ஷிகள் ஒன்று கூடிவிடும். அதிகாரத்தை மாற்றுவது நிச்சயமானுல், பிரிந்து நின்ருல் பரிவு உண்டு என்ற பிரமை நீங்கும்.

ராணுவத்தில் அடங்கிய இந்தியர் புதிய கவர்ன்மெண்டை ஏற்பரா என்ற சங்கைக்கு உண்மையில் இடம் இல்லை. கிளப்புவதும் குறும்புத்தனம். வேண்டுமானுல் வாக்கெடுத்து விளக்கிக் கொள்ளலாம். அதோடு அந்த அச்சம் விடும். இன்னெரு சந்தேகம்! யுத்த கால மத்தியில் எதற்காக பரீக்ஷை பார்க்க வேண்டும்? இப்பொழுதுள்ள கவர்ன்மெண்டைவிட யுத்தம் சம்பந்தப்பட்டவரையில் புதிய கவர்ன்மெண்டு என்ன செய்யப்போகிறது? கண்ணிருந்தும் காணுதவர் கூற்று இது. யுத்தத்தில் வெற்றி காண ராணுவ பலம் போதாது; யுத்த அரங்கம் போர் முனையோடு நிற்கவில்லை. தேசம் பூராவும் வியாபித்திருக்கிறது. மக்களுக்கு மனே தைரியமும் நெஞ்சுறுதியும் இல்லாவிட்டால் காரியம் கெட்டு விடும். இது பிரத்தியக்ஷ அனுபவம். போர் முனையை வலுப்படுத்துவது பிறரால் சாத்தியம். மக்களுக்கு மனேதைரியமூட்ட அவர்கள் மனமொப்பிய கவர்ன்மெண்ட் ஒன்ருல்தான் முடியும். சுவாதீன கவர்ன்மெண்டினுல் பலம் பன்மடங்கு பெருகும் என்பதன் அர்த்தம் அதுதான்.

சந்தேகங்கள் ஏற்படுவது சகஜம். உண்மையானுல் விலக்குவது எளிது. பாசாங்கானுல் புதிது புதிதாக முளைத்துக் கொண்டே இருக்கும்; தீர்க்க, தெய்வத்தினுலும் முடியாது. நிலைமையிலுள்ள அநுகூலம் ஒன்று உண்டு. இனி ஒளிமறைவு சாத்தியம் இல்லை. நியாயத்திற்குப் போராடும் உலகம், விழித்து நிற்கிறது. குடும்பப் பிரச்னை என்று விலக்கி விடுவதற்கும் இல்லை. யுத்தத்தில் வெற்றி காண எவ்வளவு பலம் எங்கே சுரந்தாலும் தேவை. பலவீனம் எங்கே கண்டாலும், எல்லாருடைய க்ஷேமத்தையும் அது பாதிக்கும்; எதிர்கால வாழ்வை இனி ஊரார் கண்காணிப்பே காப்பாற்றப் போகிறதென்கிருர்கள். அது உண்மையானுல் உறைகல் இது. பிறர் குறுக்கிடுவதை ராஜாஜியும் விரும்பவில்லை. நேருக்கு நேராகத் தீர்த்துக் கொள்ளவே விரும்புகிருர். தீருவது நிச்சயம்; தவிர்க்க முடியாது; தாமதப்படலாம்; தாமதப்பட விடுவது புத்திசாலித்தனமல்ல. ராஜாஜியின் கட்சி அதுதான்.

சென்றவார நிகழ்ச்சிகள்

(முன் பக்கத்தொடர்ச்சி)

எதிரிகளைத் தாக்கியது. யுத்தம் வர வர வலுத்து இன்னும் நடந்துகொண்டிருக்கிறது.

முந்திய மூன்று தினங்களாக நேச விமானங்கள் எதிரியின் முன்னணி விமான நிலயங்களைத் தாக்கி வந்தன.

நேசப்படைகள் வட ஆட்பிரிக்காவில் மூன்ருவது முறையாக இப்போது முன்னேறித் தாக்க முற்பட்டிருக்கின்றன. எல் அலமீனுக்கு எதிரேயுள்ள அச்சுப் படை நிலயங்கள்மீது தாக்குதல் ஆரம்பமாகி விட்டது. கெய்ரோவிலிருந்து வெளியான சுருக்கமான அறிக்கையிலிருந்து அச்சுதேசப்படைகளை அடியோடு சிதைக்கும் கருத்துடன் பிரிட்டிஷ் படைகள் தங்கள் முழுபலத்தையும் கொண்டு தாக்க ஆரம்பித்திருக்கின்றன என்றே தோன்றுகிறது. 5 தினங்களாக நேச விமானங்கள் இடைவிடாமல் எதிரி நிலயங்கள் மீது குண்டு வீசியதானது ஒரு பெரிய தாக்குதலுக்கு முன்னேற்பாடு நடப்பதைத் தெளிவாக்கியது. எதிரிகளும் இத்தாக்குதலுக்குத்தயாராகி வந்திருக்கின்றனர்.

* * * *

இந்திய சமுத்திரத்தில்

இந்திய சமுத்திரத்திலும், ஆப்பிரிக்காவின் கிழக்குக் கரைக்கு அருகேயும் மிகச் சக்திவாய்ந்த பிரிட்டிஷ் கடற்படையொன்று சஞ்சரித்து வருகிறது.

அட்மிரல் ஸர் ஜேம்ஸ் ஸோமர்வில்லின் தலைமையில் உள்ள அப்படையில் "வார்ஸ்பைட்" (30,600 டன்) "ராயல் ஸாவரின்" "ரிஸல்யூஷன்" (ஒவ்வொன்றும் 29,150 டன்) ஆகிய மூன்று பெரிய யுத்தக் கப்பல்களும், 'இல்லஸ்டிரியஸ்' என்ற நவீன விமானந் தூக்கிக் கப்பலும் (23,000 டன்) இருக்கின்றன. அப்படையிலுள்ள மற்ற யுத்தக் கப்பல்களின் பெயர்கள் தெரியவில்லை, ஆனல் இவ்வளவு சக்திவாய்ந்த யுத்தக் கப்பல்களுடன் பல குரூஸர்களும், நாசகாரிகளும், வேறு பல உதவிக் கப்பல்களும் இருப்பது திண்ணம்.

ஸ்டாலின்கிராட் போர்

கடுமையான போர் ஸ்டாலின் கிராட்டுக்காக நடக்கிறது. சென்ற சிலதினங்களில் ரஷ்யர்கள் ஏராளமான படை பலத்தை வால்கா வழியாகக் கொண்டு வந்திருக்கின்றனர். ரஷ்ய பீரங்கிப் படையினருக்கும் விடாமல் படை பலம் வந்து சேருகிறதெனக் கூறப்படுகிறது.

ஸ்டாலின்கிராட் தொழிற்சாலைக்குப் போகும் பாதைகளை நேற்று ஊடுருவிச் சென்ற ஜெர்மன் தரைப்படை ரஷ்யத் துருப்புகளால் பின்னுக்குத் தள்ளப்பட்டது.

சோவியத் துருப்புகள் சிறிது தூரம் முன்னேறி ஸ்டாலின் கிராடுக்கு வடமேற்கே தங்களது படை நிலயங்களைப் பலப்படுத்திக் கொண்டனரென்று மாஸ்கோ ரேடியோ கூறியது. பல பகுதிகளில் பலர் சிறைப் பிடிக்கப்பட்டனர். தளவாடங்களும் கைப்பற்றப்பட்டன.

முற்றுகையிடப்பட்ட நகரின் வடக்கிலும் தெற்கிலும் ஒன்று சேர்ந்துகொண்டிருக்கும் இரண்டு ஸோவியத் உதவிப்படைகள் மேற்கொண்டு முன்னேறியதாகத் தகவலெதுவுமில்லை. சென்ற சில தினங்களாக இப்பகுதிகளில் கடுமையான போர் நடந்து வருகிறது,

மார்ஷல் சியாங் நம்பிக்கை

பொதுஜன அரசியல் சபையின் மூன்ருவது கூட்டத்தை மார்ஷல் சியாங்கெய்ஷேக் ஆரம்பித்து வைக்கையில் "ஜப்பானியத் தாக்குதலின் வேகம் உச்ச நிலையைக் கடந்தாகிவிட்டது. இறுதியில் ஜப்பானியர் தோல்வியும் நேசக்கட்சியின் வெற்றியும் நிச்சயம். பிரிட்டனும் அமெரிக்காவும் சீனவிலுள்ள விசேஷ உரிமைகளை விட்டுக் கொடுக்க இணங்கியிருப்பதன் மூலம் அந்நாடு எது தேசத்தின் அந்தரங்கத் தன்மையை நிரூபிக்கிறது" என்று கூறினுர்.

யுத்தம் நெடுநாள் நடக்குமென்றும் எல்லா நாடுகளும் சுதந்திரத்துடனும் சம அந்தஸ்துடனும் வாழும் பொருட்டே இப்போராட்டம் நடக்கிறதென்றும் மார்ஷல் சியாங் தெரிவித்தார்.

டோங்ரேயின்

பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற

குழந்தைகளின் டானிக்

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமீ
வைத்தியசாலை,
பழனி. S. I.

பாக்கிஸ்தான் விலை ரூ. 1-8-0

வீரத் துருக்கி .... அணு 4.
தாஜ்மஹால் .... அணு 6.
வி. பி. வேறு.

ஷாஜஹான் புக் டெப்போ,
நாச்சியார் கோவில்.

சூதகம் நின்றிருந்தால்

3 நாட்டுகள் என்னும் மாத்திரைகளை 3 நாளைக்கு உபயோகித்தால் ஒழுங்கு பட்டுவிடும். ஒவ்வொருஆர்டருடன் உத்தரவாதம் அனுப்பப்படும். விலை ரூ. 5/8. பத்து ஷிலிங்.
Dr. S. H. KHAN, (S. M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ5, ஆருடம் 3கேள்விகளுக்கு ரூ. 1.

மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், திருநீர்மலை, குரோம்பேட்டு போஸ்டு, எஸ். ஐ. ஆர்.

வைத்திய ரத்னம் பண்டித

எம. துரைஸ்வாமி ஐய்ங்கார், ஏ. கே. ஏ. வி.

ஆயுர்வேத பூஷணம், ஆயுர்வேதாசார்ய அவர்களுடைய மேற்பார்வையில் தயார் செய்யப்படும் சித்தௌஷதங்கள்.

ஸித்தயோக ரஸம்

ஸ்தூல தேஹம், பிளட் பிரெஷர் (High Blood-Pressure) என்னும் வாதரோகம், நீரிழிவு ஆகிய ரோகங்களுக்கு 100 மாத்திரை ரூ. 11. 50 மாத்திரை ரூ. 6.

மாதுலுங்க ரஸாயனம்

பசியின்மை, அரோசகம், பித்தக் கோளாறுகள், கர்ப்பிணிகளின் பித்த விகாரங்கள், குமட்டல் முதலியதை தீர்ப்பதில இணையற்றது. குழந்தைகளும்பசிதீபனத்திற்குக் குளிர்ச்சிக்கும் அருந்தக்கூடியது. தேனபோன்றது. 1 பவுண்ட் ரூ. 5. 6 அவுன்ஸ் ரூ. 2.

ஹரீதக்யாதி லேஹ்யம்

எவ்வித மலபந்தத்தையும் நிவ்ருத்திக்கும் ஸங்கடமுமில்லாமல் நாள்தோறும் மலத்தை வெளிப்படுத்தும். இரத்தமூலம், வயிற்றில் உப்பஸம் இவற்றிலும் மிக்க உபயோகமானது. குழந்தைகர்ப்பிணிஅனைவரும்உபயோகிக்கலாம். 1 பவுண்டு புட்டி ரூ. 3.

லோஹாஸவம்

இரத்த சுத்திக்கும் இரத்த விருத்திக்கும் இன்றியமையாத அயத்திராவகம். பாண்டு ரோகம், பலயீனம், சொறி, சிரங்கு முதலிய சர்மரோகங்கள் இவற்றால்வருந்துபவர் அவச்யம் உபயோகிக்கக்கூடியது. 1 பவுண்டு ரூ. 4.

இராஜாம்ருகாங்கம்

க்ஷயரோகத்தைத் தீர்ப்பதற்குச சாஸ்திரத்திலும் அனுபவத்திலும் மிகப் பெயர்பெற்றது. பல க்ஷயரோகிகள் வேறு சிகித்ஸைகளால் குணமடையாமல் இதனால் சுகமடைந்திருக்கிறார்கள். 100-மாத்திரை ரூ. 10. 50 மாத்திரை ரூ. 5—8—0.

ஸித்த மகரத்வஜம்

தாது புஷ்டியை விருத்தி செய்ய ஆண், பெண் இருபாலரும் உபயோகிக்கக் கூடிய சாஸ்திரப் பிரஸித்தமான சித்தௌஷதம், தங்க பஸ்மம் கலந்த ஆர்யன் பார்மஸியாரின் ஸித்த மகரத்வஜமே மிகவும் நம்பிக்கையுள்ளது. 1 தோலா செந்தூரம் ரூ. 25. மாத்திரையுருவாக 100மாத்திரை ரூ. 15. 50 மாத்திரை ரூ. 8. 25மாத்திரை ரூ. 4-8-0

சர்மரோகாந்தக லேபம்

எச்சில் தழும்பு, மேகப்படைகள், சொறி, சிரங்கு முதலிய தோலைப்பற்றிய கடுமையான வியாதிகளை சீக்கிரத்தில் நிச்சயமாகவும், திருப்திகரமாகவும் தீர்க்கக்கூடியது நூற்றுக்கணக்கானபேர்சுகமடைந்திருக்கிறார்கள். பெரிய டப்பி ரூ. 1—4—0 சிறிய டப்பி அணு 12.

குறிப்பு:—எதற்கும் தபால் சார்ஜ் பாக்கிங் சார்ஜ் முதலியது வேறு.

வேறு சாஸ்த்ரீய ஔஷதஙகளும் கிடைக்கும.
(வியாபாரிகளுக்கு விசேஷ கமிஷன்)

"ஆர்யன் பார்மஸி — "ஆர்ய கிருஹம்"

11, ஆதியப்ப முதலித் தெரு :: வேப்பேரி போஸ்டு :: மதராஸ்

உயர்தரமான இலைகளைப் பொறுக்கி வெகு ஜாக்கிரதையுடன் அனுபவ ரீதியாகப் பதம் செய்யப்படுவதால் நரஸூஸ் டீ நறுமணமுள்ளதாக இருக்கிறது. நரஸூஸ் காப்பிக்கோ சூரிய வெப்பத்தால் நன்ருக பழுத்த முதல்தரக் கொட்டைகளே பொறுக்கப்படுகின்றன. பிறகு நன்ருக வறுக்கப்பட்டு நீங்கள் விரும்பும் நறுமணமுள்ள இனிய காபிக்கான தூளாக செய்யப்படுகிறது.

நரஸூஸ் டீ, காபி

எந்தத் தரத்திலும் எவ்வளவு வேண்டுமானாலும் இந்தியாவில் எந்த பாகத்திற்கும் அனுப்பப்படும்.
மற்ற விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—
நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி.
ஹெட் ஆபீஸ்:
சேலம்.

MNK-9

உஷ்ண காலத்திய பாத உபத்திரவங்களுக்கு தினசரி இரவு தவறாமல் ஜாம்பெக் தடவுங்கள்.

கோடை காலத்தில் பாதம் வீங்கி புண்பட்டிருக்கும். தினசரி இரவு ஜாம்பெக் தடவி கால்களை சரிவரவைத்திருங்கள். ஜாம்பெக்கிலுள்ள அற்புத மூலிகை சத்துக்களை சருமம் இழுத்துக்கொள்வதால் வலி, வீக்கம் குறைந்து ரணம் ஆறும். பித்தவெடிப்பு முதலியவையும் சீக்கிரம் குணமாகும். கால்கள் திரும்பவும் ஆரோக்யமாக மாறும். விலை ரூ. 1 அல்லது 2-4. எல்லா மருந்து வியாபாரிகளிடமும் ஏஜண்டுகள்:—மெஸர்ஸ் தாதா அண்டு கம்பெனி, பார்க் டவுன், மதராஸ்.

"எப்பொழுதும் ஜாம்-பெக் உபயோகியுங்கள்.



ZAM-BUK

மிருகக் கொழுப்பற்றது.

Printed and Published by T. S Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras. Editor, C. R Srinivasan, B.A.

சீவக சிந்தாமணி-19.



சீவகனும் தோழரும்

★

—வ. வேணுகோபாலன்—

எழுதியது

ஏமமாபுரத்தின் புறநகர்ச் சோலையில் பதுமுகன் முதலிய தோழர்கள் சீவகனைக் காண்பதுபற்றி ஆலோசனை செய்தனர். நகரில் சீவகன் இருக்கிருனு என்று அறிந்து வரும்படி மூன்று வீரர்களை அனுப்பினர், பின்னர் பதுமுகன் எழுந்து, "நண்பர்களே! ஏமமாபுர மன்னனுடைய பசுக்களை நாம் வளைத்துக் கொள்வோம்; அப்போது பசுக்களை மீட்க அரசன் படை வரும்; சீவகனும் வருவான்; அப்போது அவனை நாம் சந்தித்துக் கொள்ளலாம்; போர்க்களத்தில் அவனைக்காண்பது நிச்சயம்; அதோ, பசுக்கள் மேய்கின்றன; விரைவில் புறப்படுங்கள்" என்று கூறினான்.

"பதுமுகா! நீ கூறியபடி செய்யலாம்; ஆனல், சீவகன் அங்கு இருப்பதை அறியாமல் பசுக்களை வளைத்துக் கொள்ளக் கூடாது; அப்படி, சீவகன் இல்லாதுபோனல் அரசனுடைய பெரும்படை வந்துவிடும்: அதைக் கண்டு நாம் திரும்பினல், 'போருக்குப் பின் காட்டினேம்' என்று பழிப்பார்கள். எதிர்த்தோமானல், யானைகள் முழுகும்படி இரத்தப்பெருக்கு உண்டாகும்; இக்காரியத்தில் இன்னும் ஆலோசிக்கவேண்டும்" என்று புத்திசேனன் கூறினன்,

மற்ற தோழர்கள், "பதுமுகன் கூறியபடியே செய்யவேண்டும்; வேறு நினைக்க வேண்டாம்" என்று கூறினர். அந்தச் சமயத்தில் முன்பு நகருக்கு அனுப்பிய மூன்று வீரர்களும் வந்து தோழரை வணங்கிக் கூறலாயினர்.

"ஐயன்மீர்! நாங்கள் நகருக்குச் சென்றவுடன் ஒரு காட்சியைப் பார்த்தோம். அரசன் யானையான வளையசுந்தரம் மதங்கொண்டு எவருக்கும் அடங்காமல் ஓடியது. பாகர்கள் யானையிடம் போவதற்கு அஞ்சி ஓடி விட்டனர். நமது நந்தட்டனுடன் சீவகன் அங்குத் தோன்றினன். உடனே சீவகன் ஓடிச் சென்று யானையை அடக்கி அதன் மீது ஏறி அரண்மனைக்குள் அதைச் செலுத்தினன். அதைக் கண்ட அரசனும் மக்களும் சீவகனைப் புகழ்ந்து போற்றி வரவேற்றனர், பின்னர், சீவகனும் நந்தட்டனும் தம மாளிகைக்குச் சென்றனர். நாங்கள் நந்தட்டன் அருகில் இருப்பதைக் கொண்டே சீவகனை அறிந்து கொண்டோம்" என்றனர்.

வீரர்களின் வார்த்தைகளால் தோழர்களுக்கு மேலும் ஊக்கம் உண்டாயிற்று. உடனே பதுமுகன், சீவகனைக் கண்டு வந்த வீரர்க்குப் பொன்னுபரணங்களைப் பரிசாக அளித்தான். பின்னர், போருக்கு ஆயத்தமாகிக் கவசங்களைத் தோழர் அணிந்து கொண்டனர். இருபதினுயிரம் குதிரை வீரர்களும் போருக்குப் புறப்பட்டனர். பறை, சங்கம் முதலியன முழங்கின. தோழர் நால்வரும் குதிரை மீது ஏறி, புறநகரின் புறத்தில் மேய்ந்து கொண்டிருந்த பசுக்களை நோக்கிச் சென்றனர். தோழரின் குதிரைப் படை அரண்மனைப் பசுக்களையெல்லாம் வளைத்துக் கொண்டது. பசுக்களைக் காக்கும் இடையர், தோழர் படையுடன் பொருதனர். தோழர்கள் அம்புகளைப் பொழிந்து இடையர்களைத் துரத்தினர். இடையர்கள் அஞ்சிப் புறங் காட்டினர்; உடனே அரசனுக்கு அறிவிக்க எண்ணி ஓடினர். தோழர் படை பசுக்களை வளைத்துக் காவல் செய்தது.

* * * *

அரண்மனையில் சபாமண்டபத்தில் அரசன் தடமித்தன் நந்தட்டனுடன் பேசிக் கொண்டிருந்தான். சீவகனுடைய குலம், முதலியவற்றை அறிய அரசன் ஆவல் கொண்டான். "குமர! உங்களுடைய நாடு, நகரம், குலம் முதலியவற்றைக் கூற வேண்டும்" என்றான் அரசன்.

"அரசே! எமது நாடு ஏமாங்கதம். இராசமாபுரம் என்பது நகரின் பெயர். எம் குலம்......" என்று நந்தட்டன் கூறிக்கொண்டிருக்கையில், "பகைவரின் குதிரைப்படை பசுக்கூட்டத்தைக் கவர்ந்தது" என்று இடையர் பேரிரைச்சல் செய்தனர். தடமித்தன் திடுக்குற்றுக் கண்கள் சிவக்க எழுந்து நின்றான்.

"சேனபதி! உடனே நான்கு படையுடனும் சென்று பகைவரைச் சிறை செய்து பசுக்கூட்டத்தை மீட்டுவருக" என்று கட்டளையிட்டான். சேனபதி விரைந்து சென்றான். நந்தட்டன் விரைந்து சென்று சீவகனிடம் அதைக் கூறினன். சீவகனும் நந்தட்டனும் போருக்குப் புறப்பட்டனர்.

அரசன் படைகள் வெள்ளம் போல் திரண்டு எழுந்தன. வாத்தியங்கள் முழங்கின. யுத்தமுரசு இடியைப்போல் முழங்கிக் கொண்டிருந்தது. யானைகள் கடுகி ஓடின: குதிரைகள் தாவிச் சென்றன. காலாட்படை விரைந்து சென்றது. படையின் நடுவில் சீவகன் வில்லைத் தாங்கி தேரில் நின்றான். அவன் தேரை நந்தட்டன் ஓட்டிக்கொண்டிருந்தான். தேரில் நின்றபடியே சீவகன், சிலவார்த்தைகளைக் கூறினன்;

"அரசனுடைய பசுக்களைக் கவர்ந்த பகைவரை அரசன் பாதத்தில் வணங்கும்படிச் செய்வேன்: செய்யேனுனல், கன்னிமகளிர் உள்ளத்தே தோன்றும் காமம்போல, என் பெயர் உலகில் பரவாதுமறைக" என்று வஞ்சினம் கூறினன். விரைவில் சீவகன் படையும் தோழர் படையும் எதிர்பட்டுமோதின. அரசன் படையோடு பொருதற்குத் தோழர் வில்லைக் கையில் ஏந்தினர். படைகளின் நடுவில் நந்தட்டன் தேரை ஓட்ட, அதில் சீவகன் வில் ஏந்தி நிற்பதைப் பதுமுகன் கண்டு உவகை கொண்டான். உடனே 'அடியேமாகிய யாம் தன் (சீவகசாமியின்) அடி நிழலில் தங்க வேண்டிச் சச்சந்தன் மகனைக் காண வந்தேம்' என்று ஓர் அம்பில் எழுதினன். அந்த அம்பை வில்லில் தலை கீழாகத் தொடுத்துச் சீவகன் தேர் மீது எய்தான். பதுமுகன் எய்த அம்பு, சீவகனுக்கு முன்பு பின் முன்னுக மாறி வீழ்ந்தது. அந்த அம்பையும், அதிலுள்ள எழுத்துக்களையும் கண்ட சீவகன், 'இக்காரியம் செய்தது பதுமுகனே' என்று உணர்ந்தான். உடனே போர் செய்யாதபடி, தன் மேல் ஆடையை எடுத்துவிசித் தன் சேனையை விலக்கினன். உடனே தோழர் படையும் பின் வாங்கின. அப்போது பெரும் ஆரவாரம் உண்டாயிற்று.

தோழர் நால்வரும் சீவகனுக்கு முன் ஓடிச் சென்று அவன் பாதங்களில் வணங்கினர். கண்ணீர் சொரிந்து தம் அன்பைப் புலப்படுத்தினர். சீவகன் மகிழ்ச்சியோடு தோழரைத் தழுவிக் கொண்டான். நந்தட்டனும் தோழரும் தழுவிக்கொண்டனர். சீவகனும் தோழரும் நந்தட்டனும் அளவளாவி மகிழ்ந்தனர். விசயன் முதலிய அரசிளங் குமரர்க்குத் தோழரைச் சீவகன் அறிமுகம் செய்வித்தான். சீவகன் முதலிய யாவரும் யானைகள் மீது ஏறினர். தோழரும், அரசிளங் குமரரும் சூழ, சீவகனும் நந்தட்டனும் நகருக்குள் சென்றனர். வீரரும், மகளிரும் வரவேற்க யானைகளிலிருந்து யாவரும் இறங்கி அரண்மனைக்குள் சென்றனர். சீவகன் தோழரை அழைத்துக்கொண்டு தடமித்தன் இருக்குமிடம் சென்றான். யாவரும் அரசனை வணங்கி நிகழ்ந்ததைக் கூறினர். அதைக் கேட்டு வியப்புற்ற தடமித்தன், தோழரைக் கண்டு இன்னரென்று அறியானுய் சீவகனைக் குறிப்புப்பட நோக்கினன். தடமித்தனுடைய முகக் குறிப்பை அறிந்த சீவகன், "இவர்கள் என் உயிர்த் தோழர்கள்" என்றான்.

தடமித்தன் தோழரை உபசரித்து அளவளாவிய பின், "கனகமாலையிடம் அழைத்துச் செல்க" என்று சீவகனிடம் கூறினன். சீவகன் தோழரை அழைத்துக்கொண்டு கனகமாலை இருக்கும் மாளிகையை அடைந்தான். தோழர் கனகமாலையைக் கண்டதும் வணங்கி நின்றனர். சீவகன் புன்னகையுடன் அருகில் நின்றான். கனகமாலை திடுக்குற்று நாணியவளாய் 'இவர்கள் யாரோ' என்றும் குறிப்புப் பட சீவகனைப் பார்த்தாள். "இவர்கள் என் உயிர்த்தோழர்" என்று கூறிப் பின்னர் நிகழ்ந்ததையும் உரைத்தான்.

"ஓ! பசுக்களைக் கவர்ந்த கள்வர்களா, இவர்கள்? இனி இவர்கள் தண்டிக்கத் தக்கவர்கள் தாம்" என்று கூறிக் கனகமாலை நகைத்தாள். பின்னர் தோழர் நால்வருக்கும் அன்புடன் விருந்து செய்து உபசரித்தாள். சீவகன் தோழருடன் எல்லாவற்றையும் பேசி மகிழ்ந்திருந்தான்.

தனியே சீவகன் இருக்கும் போது அவனிடம், காந்தருவதத்தை கொடுத்த திருமுகத்தை கொடுத்தான் புத்திசேனன்; காந்தருவதத்தை அனுப்பிய திருமுகத்தை ஆவலுடன் சீவகன் பிரித்தான்.

"திருவடியின் கீழ், சிற்றடிச்சியாகிய தத்தை, வணங்கினேன்; அடிகள் கண்டருள்க; எம்மன்னனுகிய கலுழவேகன், வயிரமணிகளும் மாலைகளும் ஆபரணங்களும், வீரபானமும், சந்தனம் முதலியனவும் வில் முதலிய படைக்கலங்களும் தரனிடம் கொடுத்தனுப்பினன். யான், தரன் வந்ததைப் பிறர் அறியாமல் அவனை மறைவிடத்தே அழைத்து வந்து, 'சீவகசாமி ஏழு மாதங்களுக்கு முன்பு, தோழருடன் ஏமமாபுரம் சென்றார். இக்காரியம் சீவகசாமி

தாமே அருளினார்' என்று கூறினேன். கட்டியங்காரன் தம்மைச் சிறை செய்தானென்ற பழி, வெள்ளி மலையில் பரவுதற்கு அஞ்சி, வேறு சில காரியங்களையும் சொல்லிச், சூளுறவு (ஆணை) கொண்டு அவனை அனுப்பினேன். இனி அந்தப் பழியை மறைத்து, அரச உரிமையைப் பெறுவதே புகழாகும். அவ்விதமின்றிப் பல மகளிரைக் கலியாணம் செய்து கொள்வதனால் சிறிதும் புகழ் இல்லை. சிறைப் பழியை அல்லாமல், வேறு ஒரு பழியையும் குணமாலை உண்டாக்குவாள் போல் இருக்கிறாள். காரணம், தாமே தம்மைப் பிரிந்த பிரிவால் ஆற்றாளாய், இரவு இது. பகல் இது என்று அறியாளாய் மயங்குகிறாள். சந்திரனைப் பார்த்துச் சூரியனென்றும், சூரியனைப் பார்த்துச் சந்திரனென்று கூறிப் பிதற்றுகிறாள். அவளுடைய முகமும், தோளும், மார்பும் அழகிழந்து வாடுகின்றமையால், இனி அவள் பிழைப்பாளோ, இறப்பாளோ அறியேன். அவள் துன்பத்தைக் கண்ட அருமைக் கிளி, 'சீவகசாமி, நாளை வருவான்; நீ வருந்தாதே' என்று கூறினால், 'கிளியே! நீ கூறிய நாளை என்னும் நாள் பக்கத்தில் உள்ளதோ? தூரத்தில் உள்ளதோ? அந்த நாளைச் சொல்லு' என்று பிதற்றுகிறாள்; அதைக் கேட்டு கிளி சிரிக்கின்றது. அவள் துன்பம் நாள் தோறும் இவ்விதம் இருக்கின்றது. புது மணவாளப் பிள்ளை (நித்ய கல்யாணர்) யாகிய தாங்கள் என் மனத்தில் நீங்காமல் இருக்கின்றமையால் யான் வருந்தாமல் பொழுது போக்கியிருக்கிறேன். இனி தாம், தம்மைப் பாதுகாத்துக் கொள்க' என்று வாசித்தான் புது மணவாளப் பிள்ளை என்று ஊடலுணர்த்தும் சொல்லால் காந்தருவதத்தை எழுதிய திருமுகத்தைப் படித்ததும் வியப்புடன் தலையை அசைத்துக் கொண்டான். 'தம்மைப் போற்றிக் கொள்க' என்று முடிவில் எழுதியிருப்பதைக் கண்டு உள்ளம் பூரித்தான். குணமாலையின் வருத்தத்தை உணர்த்தும் சொற்களைப் படித்து மனம் உருகினான். பின்னர் தன் தோழர் இருக்கும் இடத்தை அடைந்தான்.

"நண்பர்களே! நீங்கள் என் பிறப்பை எவ்வாறு உணர்ந்தீர்கள்?" என்றான்.

"ஐயனே! தண்டகாரணியத்தில் சச்சந்தன் தேவி விசயையைக் கண்டோம். தேவியார், தவ உருவம் தாங்கி, மனத்தில் 'நீ வாழ வேண்டும்' என்ற ஆசையால் தாபதப்பள்ளியில் அமர்ந்துள்ளார்; அவரைக் கண்டு உன் பிறப்பை அறிந்தோம்; முன்பு, யாங்கள், உன்னைக் கந்துக்கடன் மகன் என்ற முறையில் பழகிய குற்றத்தைப் பொறுக்க வேண்டும்" என்று தோழர் கூறினர். அதைக் கேட்ட சீவகன் திடுக்குற்றான். "தாய் உயிரோடு இருக்கிறாள்" என்று அச்சணந்தியாசிரியன் முன்பு கூறக் கேட்டிருந்ததை அப்பொழுது நினைத்து உள்ளம் உருகினான். பெற்ற தாயை ஒரு முறையேனும் பார்க்காது இன்பம் அனுபவித்திருந்த தன்னை வெறுத்துக் கொண்டான்.

"நண்பர்களே! நீங்கள் என்ன சொன்னீர்கள்? என்ன என்ன......?" என்று ஆவலுடன் கேட்டான். தோழர்கள் விசயை கூறியவற்றையெல்லாம் முறையே சீவகனுக்குக் கூறினர். தோழர்கள் கூறிய வார்த்தைகள் தேவியே நேரில் நின்று கூறுவது போல் இருந்தன சீவகனுக்கு. கண்ணீர் களகளவென்று முத்தைப் போல் உதிர்ந்தது. மெய்ம்மறந்தான்.

"என்னைப் பெற்ற தீவினையையுடைய தேவியார்க்கு உண்டாகாத துன்பங்கள் இனி இல்லை; அவ்வளவு துன்பங்களையும் அடைந்த தேவியார் இன்னும் என் பொருட்டு உயிரோடு இருக்கின்றாரா?" என்று கூறிக் கொண்டே பொருமினான்.

"அரசிளங்குமர! நல்வினையாகிய தெய்வமே, நமக்குத் தவியரை அருளியது" என்றார் தோழர்கள். உடனே சீவகன் உள்ளம் குளிர்ந்து, "எங்கே? அவர் இருக்கின்ற திசை எங்கே? எங்கே?" என்று கூறித் தண்டகாரணியம் இருக்கும் திசைப் பக்ககமாக கைகுவித்துத் தொழுதான்.

உடனே, சீவகன் தோழருடன் தடமித்தன் இருக்குமிடம் சென்றான். தடமித்தன் அவர்களைக் கண்டு மகிழ்ந்து, சீவகனுடைய குலத்தை அறிய ஆவல் கொண்டான். உடனே தோழரை நோக்கி, "குமரர்களே! ஐயன் எக் குலத்தான்?" என்றான். உடனே தோழர் உவகையுடன், "அரசே ஐயன் குலம் குருகுலம்" என்றார்கள்.

"சீவகன் குரு குலத்தான் என்றால் யான் முன்பு கருதிய குலமே" என்று கூறிச் சீவகனை மார்புடன் தழுவிக் கொண்டான் தடமித்தன். சீவகன், தான் தாயைக் கண்டு, பின்னர் நாடு கொள்ளக் கருதியிருப்பதை அரசனுக்குக் கூறினான். அரசனும் மந்திரியருடன் ஆராய்ந்து சீவகனுக்கு வேண்டிய படை, பொருள் முதலியவற்றைக் கொடுத்து விடை தந்தான். உடனே சீவகன், கனக மாலையிடம் சென்று தன் காரியங்களை உணர்த்தினான். சீவகன் பிரிவிற்குக் கனகமாலை வருந்தினாள். சீவகன் அவளைத் தேற்றி விடைபெற்று விசயன் முதலிய மைத்துனர்களைக் கண்டு பேசிவிட்டுத் தோழரிடம் வந்தான். இருபதினாயிரம் குதிரை வீரரும், தடமித்தன் அனுப்பிய படை வீரரும், மங்கை நூற்றுவரும் தண்டகாரணியத்தை நோக்கிப் புறப்பட்டனர். சீவகனும் தோழரும் நந்தட்டனும் தத்தம் குதிரைகள் மீது ஏறி விரைந்து சென்றனர். அப்போது நன்னிமித்தமாகச் சங்கம், பறை, முதலிய வாத்தியங்கள் முழங்கின.

அடுத்த வாரம் :—

தாயும் மகனும்

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், திருநீர்மலை, குரோம்பேட்டை போஸ்டு, எஸ். ஐ. ஆர்.

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்

காஸ்டபீன்.

ருசி மிகுந்த சாக்லட் மலவிரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2. சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணா. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE

CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி., மதராஸ்

Dr. Paul's Pure Lotus Honey

The Infallible Medicine for Cataract Glaucoma, Ophthalmia, Ulcers of Eyes, and all other eye diseases. Acts like Magic. Money back in case of failure. Price Two Dram Phial Rs. 2. V. P. Extra.

S. PAUL & CO., (Dept. S. W.)
4, Hospital Street, Dharamtola, CALCUTTA.

பல வருஷங்கள்
யௌவன தோற்றமும் உணர்ச்சியும்
ஏன் பெறலாகாது?

தினசரி இரவு தவறாமல் இரண்டு பைல் பீன்ஸ் மாத்திரைகள் உட்கொண்டு வந்தால், பல வருஷங்கள் யௌவனதோற்றமும், சுறுசுறுப்பும், சந்தோஷமும் பெறலாம். பைல் பீன்ஸ் சுத்த தாவரசத்து. இவை சரீரத்தை சீர்படுத்தி, ரத்தத்தை சுத்தம் செய்து, தினசரி உணவு அசுத்தத்தை வெளிப்படுத்தும். எனவே நீங்கள் ஆரோக்யமாகவும், யௌவனமாகவும், வசீகரமான மெலிவு பெற்றும் விளங்குவீர்கள்.



எல்லாமருந்து வியாபாரிகளும் பைல்-பீன்ஸ் பாட்டில் ரூ. 1 வீதம் விற்கின்றனர்

BILE BEANS

பைல்பீன்ஸ் ஆரோக்யமாகவும், யௌவனமாகவும் வைத்திருக்கும்

மாப்பிள்ளை மிடுக்கு

சிறு கதை

★

வெங்கடராமன் எழுதியது

"கொண்டு வா, என் பெட்டியை! சாமான் எல்லாவற்றையும் எடுத்து வை! எங்கே என் படுக்கை? இனி அரைக்ஷணமும் என்னால் இங்கிருக்க முடியாது! என்னை உங்கள் வீட்டு வேலைக்காரன் என்று எண்ணிக் கொண்டீர்கள்?" என்று கோபமாகத்தாண்டிக் குதிக்க ஆரம்பித்தார் மாருதிரங்கம்.

ஆமாம்! அவர் தாலூகா ஆபீஸ் அட்டெண்டர்; மரியாதையாகத் தான் கூப்பிட வேண்டும்!

"மாப்பிள்ளை ஸார், கோவிச்சுக் கொள்ளப்படாது! ஏதோ வாய் அறியாமல் உங்கள் மாமனார் சொல்லிவிட்டார். அதெல்லாம் நீங்கள் மனசில்...!" என்றார் அடுத்த வீட்டுப் பெரியவர்.

"மாப்பிள்ளை என்ற முறையெல்லாம் அரை மணிக்கு முன். இப்போ ஒன்றும் கிடையாது. மரியாதை கொடுத்து மரியாதை வாங்க வேணும், ஐயா! பச்சைக் குழந்தையா, தெரியாது என்பதற்கு? பெண்ணைப் பெற்றதற்கு மட்டும் தெரிந்ததா? அதெல்லாம் சரிப்படாது! ஏய் வண்டிக்காரா, எடுத்துவை சாமானெல்லாம் வண்டிக்குள்! பெண்ணை வீட்டிலேயே வைத்துக்கொள்ளட்டும், ஏம்பா! எடுத்து வைக்கலே?"

"ஆயிடுத்துங்க சாமி வாங்க. ஏறுங்க!" என்றான் வண்டிக்காரன். மாப்பிள்ளை மாருதிரங்கம் மிடுக்காய் வண்டியில் ஏறி உட்கார்ந்தார். வண்டி சம்பங்கி கோட்டை ரயில்வே ஸ்டேஷனுக்கு வேகமாய் ஓடிச் சென்றது. அவர் மனதில், பெண்ணைத் தன்னுடன் அனுப்பவில்லை என்றே கோபம் அதிகமாயிருந்ததா, மாமனார் முதலியவர்களுக்கு, ஏன் மனைவிக்கும் உள்பட-தான் சரியானபடி பதில் கொடுத்ததால் ஏற்பட்ட திருப்தி அதிகமாயிருந்ததா, என்று சொல்வதற்கு இயலாமல் இருந்தது.

வண்டியை விட்டிறங்கி ஸ்டேஷன் மாஸ்டரிடம் போய், "வண்டி வர இன்னும் எவ்வளவு நேரம் ஸார் இருக்கிறது?" என்றார் படபடப்புடன்.

அவர் ஏறயிறங்க ஒரு தரம் ஆசாமியைப் பார்த்து விட்டு, "எந்த வண்டி?" என்று கேட்டார்.

"ரயில் வண்டி!" என்றார் மாருதி விரைப்பாய்.

"ஓகோ, ரயில் வண்டியையா? 'குட்ஸ்' வண்டியோ என்று பார்த்தேன்" என்று ஸ்டேஷன் மாஸ்டர் சிலேடையாகச் சொன்னார்.

அப்படித்தான் ஆத்திரம் வந்தால் யாரிடம் காட்டுவது என்றறிகா புரியாமல் சிலர் திண்டாடுவது பழக்கமில்லையா? அதைப் போல பதில்கூட பேசாமல் அங்கு கிடந்த ஒரு பெஞ்சியின் மேல் உட்கார்ந்தார். வண்டிக்காரன் அவருடைய பெட்டி படுக்கை எல்லாவற்றையும் எடுத்து வைத்துவிட்டு நின்றான்.

இந்த சமயத்தில் அங்கே மற்றொரு மாட்டு வண்டி வந்து நின்றது. மாருதிரங்கம் ஜாடையாக வண்டியைக்கவனித்தார். என்ன ஆச்சரியம்?, எதனால் சண்டை வளர்ந்ததோ எதற்காக ஸ்டேஷனுக்கு ஓடி வந்தாரோ, அந்தக் காரண தேவதையான அவரது மனைவி செல்லம்மாள் அவர் கண்களுக்கு அழகே வடிவமாக முதலில் வண்டியை விட்டிறங்கினாள். அவளது மிரண்ட கண்கள் ஒரு தடவை அந்த ஸ்டேஷன் பூராவையும் சுற்றிப் பார்த்து விட்டு கவிழ்ந்தன. அவளுக்குப் பின் அவள் தாயாரும், தகப்பனார் காத்த பெருமாளும் இறங்குவதை ஊகமாக தெரிந்து கொண்ட மாருதிரங்கம் திரும்பி விரைப்பாக உட்கார்ந்து கொண்டார். ஸ்டேஷன் மாஸ்டர், போர்ட்டர் இவர்களைத்தவிர ஸ்டேஷனில் இரண்டொரு காக்கைகளும் வாழைப்பழத்தோல் மேல் நூற்றுக்கணக்கில் ஈக்களும் அங்கே நிறைந்திருந்தன.

காத்த பெருமாள் மாருதிரங்கத்தை மெதுவாக நெருங்கி. "இன்னம் இரண்டு நாள் இங்கே தங்கிட்டு குழந்தையை அழைச்சுட்டு போவலாம். உங்க உடமையை உங்ககிட்ட அனுப்பாமே எங்களுக்கென்ன வந்தது? ஏதோ ஆசை கிடந்து அடிச்சுகிட்டது. கோவம் இல்லாமே எழுந்திரிங்க! அப்படித்தான் நான் என்ன சொல்லிட்டேன்? ஒரு மாசம் களிச்சு அனுப்பரேன்னு சொன்னேன். இல்லாது பொல்லாதை வாங்கிக் கொடுத்து வரச் சொல்லுவோம்னு நினைப்பு! ஏன் அப்புறமும் குந்திரிக்கிங்க?" என்று பயந்த முகத்தோடு கெஞ்சிய பாவனையில் கூப்பிட்டார்.

செல்லம் ஸ்டேஷன் கம்பித் தூண்களில் கண்களைமட்டும் மறைத்துக் கொண்டு நின்றாள், மாருதி வண்டியிலிருந்து இறங்கியவர்களில் யாரையாவது பார்த்தாரா என்றால் அவளைத் தான் ஒரு முறை இரண்டு முறை பார்த்தார். மற்ற சமயங்களில் எதிரேயிருந்த ஆலமரத்தின் கிளையில் இரண்டு காக்கைகள் உட்கார்ந்திருப்பதைத் தான் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஆஹா! செல்லம் தான் என்ன அழகு! பஞ்ரிஸ் குறி போட்ட சிகப்பு புடவையும், முழங்கை வரை நல்ல வெள்ளை ரவிக்கையும், கைகளில் கண்ணாடி வளையல்களும், காதுகளில் சிகப்புத் தோடுகளும், நத்தும், புல்லாக்கும் தரித்திருந்த காட்சி அவரது மனதை வாட்டத் தொடங்கியது. பின்னும் நெற்றியில் சாந்துப் பொட்டுக் கடியில் குங்குமமும் மேலே விபூதியும் தலையில் வேப்பிலை சொருகியிருந்ததும் அவளழகை ஒரு படி தூக்கிக் காட்டி அவரது கோபத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய் கரைத்து வந்தது.

ஏதோ அவர் மாமனாரிடம் பேச வேண்டும் என்று நினைத்த போதெல்லாம், "அடே, நீ ஒரு மாப்பிள்ளையில்லே?" என்று அவர் மனதில் ஒரு கேள்வி தோன்றி அவரைப் பேச விடாமல் தொண்டையை அடைத்துக் கொண்டு விட்டது. இரண்டு நாள் மாமியார் வீட்டில் இருக்க வேண்டும் என்ற ஆசை தான்; கர்வம் குறுக்கே போராடுகிறதே!

மாப்பிள்ளை கோபம் தணியாது என்று நினைத்த காத்த பெருமாள், "சரிங்க, அப்படியானா குழந்தை இதோ இருக்குதுங்க, கூட்டிக் கிட்டு போங்க! நாங்கதான் அப்புறம் என்ன பண்றது! செல்லம்...பத்திரமாய் போ...யிட்டு...வா! புருசன் மனசு...போ-ல-நடந்துக்க. இன்னம் ஒரு மாசத்திலே நா...வந்து உன்னைக் கூட்டியாரேன்..." என்று தொண்டையை அடைக்கக் கூறினார். அவர் மனைவி கண்களைக் கசக்கி முந்தானையால் துடைத்துக் கொண்டாள்.

மாருதி ரங்கத்தின் மனோ நிலை எப்படியிருந்ததோ:—தெரியவில்லை! ஸ்டேஷன்மாஸ்டர், போர்ட்டர் இவர்கள்கூட அக் குடும்பத்தினர் வருந்தும் காட்சியைக் கண்டு உருகினர். இதற்குள் ஒரு சிறிய நிகழ்ச்சி நடந்தது, போர்ட்டர் வண்டி வரும் முன் அடிக்க வேண்டிய முதல் மணியை அடித்தான். ஸ்டேஷன் மாஸ்டர் புக்கிங் ஆபீஸைத் திறந்து விட்டு, 'யாரும் டிக்கட் வாங்க வரவில்லையா' என்று கையால் தட்டினார். உடனே காத்த பெருமாள் தன்னுடைய வெற்றிலைப் பெட்டியை திறந்து பணமாக மாற்றி வைத்திருந்த நான்கு அரை ரூபாய்களை எடுத்து பள்ளிகொண்ட புரத்திற்கு இரண்டு டிக்கட் வாங்கக்கிளம்பினார். அந்தச் சமயம் தான் மாருதிரங்கம் தன் சாமான்கள் சரியாக இருக்கிறதா வென்று கவனிக்க ஆரம்பித்தார். உடனே தன்னுடைய சிறிய 'லெதர் பாக்' தவறியிருந்தது தெரிய வந்தது அவருக்கு.

"ஏம்பா, வண்டிக்காரா! அந்தத் தோல் பையை ஏங்கேப்பா காணோம்? அதை யெடுத்து வைக்கவில்லையா நீ!" என்று கோபம் கொண்டவர்போல் அதட்டினார்.

"அங்கே வைச்சிருந்த சாமான்களைத்தாங்க எடுத்து வச்சேன். வேறே ஒண்ணுமே இல்லிங்களே!" என்றுமென்று விழுங்கினான், காத்தபெருமாள் வண்டிக்காரனைப் பார்த்து, "சரியா எடுத்துவச்சால் பை எங்கேடா போகும்? வண்டியிலேயே இருக்கா, பார்! இல்லையா? மடையா, அங்கேயே விட்டு விட்டு வந்தாட்டே போலிருக்கு! சரிங்க, அதை நான் வரபோது கொண்டுகிட்டு வந்துட்டேரன். நான் போய் டிக்கட் வாங்கட்டுமா?" என்றார்.

"வேண்டாம்! வேண்டாம்!! நான் டிக்கட் வாங்கறேன். இப்ப நான் அந்தப் பை இல்லாமல் போகக்கூடாதே! ஏண்டா, நீ வீட்டுக்கு ஓடிப்போய் வண்டி வரதற்குள் எடுத்துவந்து விடமுடியுமா?" முடியாதென்று தெரிந்ததும், திகைத்துயோஜனையில் ஆழ்ந்தபடி கேட்டார், மாருதி.

"ஐயையோ! இன்னும்ஒண்ணரை மைல் இருக்குதுங்களே வீடு! போய் வரத்துக்குள்ளே வண்டிபோயிடுமே? என்றான் வண்டிக்காரன்.

"அதற்குள் ஆபீஸ் 'பைல்' எல்லாம் இருக்குதே, அடாடா! போ, எல்லாவற்றிற்கும் ஓடிப் போய் விட்டுவா!" என்று விரட்டினார் மாருதி.

காத்த பெருமாள், "வீடு பூட்டிக் கிடக்குதே! இந்தா சாவி! நெடுகதேடி (வேண்டாம் இரு:) நானும் வருகிறேன். டிக்கட் அதுக்குள்ள வாங்கவேணும்" என்று வண்டிக்காரனை நம்ப முடியாமல் தானும் விழுந்தடித்து ஓடினார்.

போர்ட்டரை மாருதி கூப்பிட்டு, "இந்த வண்டிக்கு பிறகு கிழக்கே போக அடுத்த வண்டி எப்போ ஐயா?" என்று கேட்டார்.

"இனிமே ஏதுங்க வண்டி! வண்டியெல்லாந்தான் நிறுத்திப்புட்டாங்களே! நாளை இந்நேரத்திற்குத்தான்" என்றான் போர்ட்டர். செல்லத்தின் தாயார் மருமகனுக்கு எதிர்த்தாற்போல நிற்க வெட்கப்பட்டுக் கொண்டு ஸ்டேஷன் ரூமுக்குப் பின்னால் போய்மறைவாய் உட்கார்ந்து கொண்டாள். போர்ட்டர் இரண்டாம் மணியை அடித்து விட்டு, 'கை' இறக்கப் போனான். அப்பொழுது மாருதியும், செல்லமும் ஒருதடவை ஒருவரைப் பார்த்து ஒருவர் மெதுவாகச் சிரித்துக் கொண்டனர்.

"வீட்டுக்குப் போயிடலாம் வாங்க, நாளைக்கு போயிக்கலாம் ஊருக்கு" என்று சன்னமாகச் சொன்னாள் செல்லம்.

"தெரியாமலா பையை வைத்துவிட்டேன் என்றேன்!" என்றார் மாருதி கள்ளச் சிரிப்புடன்.

உடனே செல்லம் தன் தாயாரிடம் போய், "அம்மா! அவுங்க நாளைக்கே போவாங்க! வண்டியெ திருப்பச் சொல்லு. ரயிலும் வந்துடுச்சு, இனிமே அவுங்க போக முடியாது" என்றாள் உள்ளுக்குள் பொங்கும் சந்தோஷத்துடன்.

மாப்பிள்ளையோடு மாமியார் ஒரே வண்டியில் உட்காருவாளா?

"அப்படியானா நீங்க வண்டியிலே முந்தி ஏறிகிட்டுப் போங்க. நான் அவுங்க வந்தப்புறம் வரேன்" என்றாள் அவள் தாயார்.

(10-ம் பக்கம் பார்க்க)

போஸ்ட் ஆபீஸ்

"தூமகேது" எழுதிய குஜராத்திக் கதை

"கமலம்" மொழிபெயர்ப்பு

பின்னிரவின் மங்கலான ஒளி, சிறியனவும் பெரியனவுமான நட்சத்திரங்களோடு, மனித வாழ்க்கையிலே இனிய நினைவுகள் போல, மினுமினுத்துக்கொண்டிருந்தது. பனிக்கட்டி போல் சில்லென்றிருந்த குளிர்காலக் காற்றின் அம்பு போன்ற வீச்சிலிருந்து தப்புவதற்காகத் தன் உடலை, கிழிந்து போன பழைய சட்டையினால் நன்றாக இழுத்துப் போர்த்துக்கொண்டு, ஒரு கிழவன் நகரத்தின் மத்திய பாகத்தின் வழியே போய்க்கொண்டிருந்தான். சுதந்திர வாழ்க்கையை அனுபவிக்கும் அநேக மனிதர்களின் வீடுகளிலிருந்து அப்போது வந்த இனிய மணியோசை, பெண்களின் மெதுவான குரலுடன் சேர்ந்து, நகரத்தின் அந்தத் தனியிரவில், கிழவனோடு கூடவே அவனுக்குத் துணை போல் தொடர்ந்து சென்றது. சற்று நேரத்துக்கொருதரம் நாய்களின் குரைப்பு; தொலையில் எவனாவது அவசர அவசரமாகப் படுக்கையை விட்டெழும் போது உண்டாகும் காலடிச் சப்தம்; குறைத் தூக்கத்தில் விழித்துக்கொண்ட ஒரு பறவையின் மெல்லிய கூக்குரல்—இவைகளைத் தவிர்த்து நகரத்தில் எங்கும் ஒரு சந்தடியுமில்லை; நாற்புறமும் அமைதி நிலவியிருந்தது. ஜனங்கள் இனிய தூக்கத்தில் ஆழ்ந்திருந்தனர். பனிக்காலத்துக் குளிரினால் இரவு பின்னும் அதிகமாக அடர்ந்து இருண்டது. 'படிப்பது ராமாயணம், இடிப்பது பெருமாள் கோயில்' என்ற சுபாவமுள்ள மனிதனைப் போல், அந்தக் குளிர் காலக் காற்று, கூரிய ஆயுதம் போன்று, எங்கும் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொண்டிருந்தது. உடல் முழுதும் வெடவெடவென்று நடுங்குவதையும் பொருட்படுத்தாமல், கிழவன் சாந்தமாக அடி மேல் அடி வைத்து நடந்து, நகரவாசலைக் கடந்து ஒரு நேர்ப்பாதைக்கு வந்தான். அவன் தன் பழைய தடியை ஊன்றிக்கொண்டே, அங்கிருந்து கொஞ்சங் கொஞ்சமாக மேலே சென்றான்.

ஒரு புறம் மரங்களின் வரிசை; மற்றொரு புறம் நகரத்தோட்டம். இங்கே குளிர் பின்னும் அதிகமாகவும், இரவு பின்னும் அதிகமான துன்பங் கொடுப்பதாகவும் தோன்றின. காற்று வேகமாக வீசியது. சுக்கிர தாரகையின் இனிய மந்தமான ஒளி பூமியில் பனி போல் பரவியது. தோட்டத்தின் கோடியில் முற்றும் புதுமாதிரியான அழகிய கட்டிடமொன்று இருந்தது. அதன் மூடிய ஜன்னல்களிலிருந்தும் வாசற்கதவுகளிலிருந்தும் விளக்கொளி வெளியே வந்து கொண்டிருந்தது.

உள்ளங் கனிந்துருகும் மனிதன், கோயிலின் பொற்கலசத்தைக் கண்டதும் சிரத்தைகொண்டு மகிழ்வது போலவே, கிழவனும் அந்தக்கட்டிடத்தின் சிகரத்தைப் பார்த்ததும் மட்டிலா ஆனந்தங்கொண்டான். கட்டிட வாசலில் வட்டமான தாழ்வாரத்தின் ஒருபுறத்தில் மேலே பழைய பலகையொன்றில் 'போஸ்ட் ஆபீஸ்' என்ற புதிய எழுத்துக்கள் பளிச்சென்று பொறிக்கப்பட்டிருந்தன.

கிழவன் தபாலாபீஸின் வெளித் தாழ்வாரத்தில் உட்கார்ந்து கொண்டான். உள்ளிருந்து விசேஷமான குரலொன்றும் வரவில்லை. வேலையில் முனைந்த ஐந்தாறு பேர்கள் தமக்குள் ஏதோ சாதாரணமான குரலில் பேசிக்கொண்டிருந்தார்கள். அதைத் தவிர வேறு எங்கும் நிசப்தம்.

"போலீஸ் ஸூப்பரின்டெண்டெண்ட்!" என்று உள்ளேயிருந்து குரல் வந்தது. கிழவன் திடுக்கிட்டான். ஆனால் மீண்டும் அமைதியாக உட்கார்ந்து கொண்டான். நம்பிக்கையும் அன்பும், அந்தக்குளிரில் கூட அவனுக்கு வெப்பத்தைத் தந்து கொண்டிருந்தன.

உள்ளிருந்து குரல் மேல் குரல்கள் வரலாயின. ஸார்ட்டர், கடிதங்களில் ஆங்கிலத்தில் எழுதிய விலாசங்களைப் படித்துப் படித்துத் தபால்காரர்களிடம் அவைகளை எறிந்துகொண்டிருந்தான்.

கமிஷனர், ஸூப்பரின்டெண்டெண்ட், திவான் சாஹப், லைப்ரேரியன்—என்றிவ்விதம் ஒன்றன் பின்னொன்றாகப் பல பெயர்களைச் சொல்லும் பழக்கமுள்ள ஸார்ட்டர் வேகமாகக் கடிதங்களை எறிந்து கொண்டே போனான்.

"கோச்மான் அலிபாபா!"—என்று வேடிக்கையான குரலொன்று உள்ளிருந்து வந்தது.

கிழவன் அதைக் கேட்டு எழுந்துநின்றான். சிரத்தையோடு ஆகாயத்தைப் பார்த்துவிட்டுக் கதவினருகே சென்று அதன் மீது கையை வைத்து, "கோகுல்!" என்று கூப்பிட்டான்.

"யார் அது?"

"என் கடிதம்தானே அது?... நான் வந்திருக்கிறேன்!"

பதிலுக்குக் கொடுமையும் பரிகாசமும் நிரம்பிய சிரிப்பொன்று வந்தது.

ஸார்ட்டர் போஸ்ட் மாஸ்டரிடம், "இவன் ஒரு பைத்தியக்காரன், ஸார்! நாள் தவறாமல் தன் கடிதங்களை வாங்கிக்கொள்வதற்காகத் தபாலாபீஸுக்கு வந்து ஏமாந்துவிட்டுப் போகிறான்" என்றான்.

கிழவன் மறுபடியும் தன்னிடத்துக்குப் போய் உட்கார்ந்தான். சென்ற ஐந்து வருஷங்களாக இவ்விடத்தில் உட்காருவது அவனுக்கு வழக்கமாய் விட்டது.

முன்பெல்லாம் அலி திறமை வாய்ந்த ஒரு வேட்டைக்காரனாயிருந்தான், அபினி சாப்பிடுபவன் அதுவின்றி வாழமுடியாது. அதுபோலவே அலியும் கொஞ்சங் கொஞ்சமாக வேட்டைப் பழக்கத்தில் கைதேர்ந்தவனாகி, அதின்றி ஒரு கணமும் வாழமுடியாதவனானான். மண் கட்டிகளோடு மண்கட்டிபோல உட்கார்ந்திருக்கும் தித்திரிப் பறவைமீது அவன் பார்வை சென்றதோ இல்லையோ, உடனே அது அவன் கைக்கு வந்துவிடும். அவனுடைய கூரிய பார்வை முயல் வளையின் அடிவரையில் பாயும். அக்கம்பக்கத்திலுள்ள பழுப்பும் மஞ்சள் நிறமுமான உலர்ந்த புற்களில் மறைந்துகொண்டு, காதுகளை அசைக்காமல் உட்கார்ந்திருக்கும் முயல்களின் பழுப்பு நிறத்தையும் மஞ்சள் நிறத்தையும் சில சமயங்களில் வேட்டை நாய்களால் கூடக் கண்டுபிடிக்க முடியாது, அவை மேலே சென்றுவிடும்: முயல்கள் தப்பித்துக்கொள்ளும். ஆனால், அலியின் இட்டாலி தேசத்துக் கருடனது போன்ற கூர்மையான பார்வை, நேராக முயல்களின் காதுகள் மீதே போய் விழும்; அடுத்த க்ஷணத்தில் அவை அவன் கையில் சிக்கும். சில சமயங்களில் அவன் மீன்களுக்கும் நண்பனாவது உண்டு.

ஆனால், தன் வாழ்க்கையின் மாலைவேளை நெருங்கி வருவதாகத் தோன்றிய சமயத்தில், அந்த வேட்டைக்காரன் திடீரென்று வேறு திசையில் திரும்பினான். அவனுடைய ஒரே பெண்ணான மரியம் கல்யாணமாகிக் கணவன் வீடு சென்றாள். அவன் மாப்பிள்ளைக்குச் சேனையில் உத்தியோகம். ஆதலால் மரியம் தன் கணவனோடு பஞ்சாபுக்குப்போனாள். அதற்குப் பின்பு இன்று ஐந்து வருஷ காலமாக, அலி எவளுக்காகத் தன் உயிரை வைத்துக்கொண்டிருக்கிறானோ, அவளைப்பற்றிய செய்தி ஒன்றுமே கிடைக்கவில்லை! அன்பும் பிரிவும் என்ன பொருள்களென்பது இப்போது தான் அலிக்குத் தெரிந்தது. முன்பெல்லாம், தித்திரிக் குஞ்சுகள் கவலையும் பயமுங்கொண்டு இங்குமங்கும் ஓடுவதைப் பார்த்து அவன் சிரிப்பது வழக்கம். அது அவனுடைய—ஒரு வேட்டைக்காரனின்—ஆனந்தமாயிருந்தது.

வேட்டையின் ஆனந்தம் அவனுடைய ஒவ்வொரு நரம்பிலும் வியாபித்திருந்தது. ஆனால், மரியம் அவனை விட்டுப்போய், அவனுக்குத் தன் வாழ்க்கை வெறிச்சென்றுதோன்றியநாளிலிருந்து, அவன் வேட்டையாடுவதை மறந்து, ஸ்திரமான பார்வையோடு, கதிர்கள் செறிந்து வளர்ந்துள்ள பசுவயல்களைப் பார்த்துக் கொண்டிருப்பான்! அவன் தன் வாழ்க்கையில் முதல் தடவையாக அப்போதுதான், இயற்கையில் அன்பின் சிருஷ்டியும், பிரிவின் கண்ணீரும் இருப்பதை உணர்ந்தான். அதற்கப்புறம் ஒரு நாள், அலி ஒரு பூவரசமரத்தின் கீழே உட்கார்ந்து, உள்ளமுருகி அழுதான். அன்றையிலிருந்து அவன் ஒவ்வொரு நாளும் காலை நான்கு மணிக்கு எழுந்து இந்தப் போஸ்ட் ஆபீஸுக்கு வரத் தலைப்பட்டான். அவன் பெயருக்கு என்றும் ஒரு கடிதமும் வந்ததில்லை. ஆனால், என்றாவது ஒரு நாள் மரியமின் கடிதம் தனக்குக் கட்டாயம் வரும் என்ற பக்தனைப்போன்ற சிரத்தையோடும், நம்பிக்கை நிரம்பிய உல்லாஸத்தோடும் அவன் பிரதிதினமும் எல்லாருக்கும் முன்னால் போஸ்ட் ஆபீஸில் வந்து உட்காருவான்.

உலகத்துக்குள்ளேயே எல்லாவற்றிலும் சுவையற்ற இடமென்று சொல்லக் கூடிய போஸ்ட் ஆபீஸ், அவனுடைய தர்மக்ஷேத்திரமும், தீர்த்த ஸ்தானமுமாயிற்று. ஒரே இடத்தில், அந்த ஒரே கோடியில், அவன் எப்போதும் உட்கார்ந்திருப்பான். அவன் நிலையையறிந்ததும், வருபவர்களெல்லாரும் அவனிடம் வேடிக்கை செய்வார்கள்; கடிதம் இல்லாமலிருந்தும் சில சமயங்களில் அவன் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டு, அவன் உட்காருமிடத்திலிருந்து கதவுவரையில் அவனை ஓடவைப்பார்கள். அகண்டமான சிரத்தையும், முடிவிலாத் தைரியமும் கொண்டு, அவன் ஒவ்வொரு நாளும் வந்து வெறுங்கையோடு திரும்பிப் போவான்.

அலி அங்கேயே உட்கார்ந்திருந்தான், இதற்குள் ஒருவர் பின்னொருவராகப் பல வேலைக்காரர்கள் தன் காரியாலயக் கடிதங்களை வாங்கிக் கொண்டு போக வந்தார்கள். இந்த இருபதாம் நூற்றாண்டில் வேலைக்காரர்கள் பெரும்பாலும் தம் ஆபீஸர்களின் மனைவிகளுக்கு வீட்டு மானேஜர்கள் போன்றவர்களே. ஆகையால் நகரம் முழுதிலுமிருந்த ஆபீசர்களின் வீட்டுச் சரித்திரங்கள் அப்போது அங்கே படிக்கப்பட்டன.

ஒரு வேலைக்காரனின் தலையில் பெரிய முண்டாசு. இன்னொருவனின் காலில் பள பள வென்று மின்னும் செருப்புகள்—இப்படியாக, ஒவ்வொருவனும் தன் விசேஷமான தன்மையை வெளியில் காண்பித்துக் கொண்டிருந்தான். கடைசியில் தபாலாபீஸின் வாசற்கதவு திறந்தது. விளக்கு வெளிச்சத்தில், எதிரே நாற்காலி மீது, தும்மட்டிக்காய் போன்ற தலையும், எப்போதும் போல் துன்பம் நிரம்பிய சோர்ந்த முகமும் தாமுமாக போஸ்ட் மாஸ்டர் உட்கார்ந்திருந்தார். நெற்றியிலோ, முகத்திலோ அல்லது கண்களிலோ ஒளியில்லாதவன், ஒன்று கோல்ட் ஸ்மித்தின் 'விலேஜ் ஸ்கூல் மாஸ்டர்' ராகவாவது இருக்க வேண்டும், அல்லது பெரும்பாலும் இந்த நூற்றாண்டைச் சேர்ந்த குமாஸ்தாவாகவோ, போஸ்ட் மாஸ்டராகவோ இருக்க வேண்டும்.

அலி தன் இடத்திலிருந்து நகரவில்லை.

"போலீஸ் கமிஷனர்!" என்று குமாஸ்தா குரல் கொடுத்தான். அபிமானமுள்ள இளைஞனொருவன் போலீஸ் கமிஷனரின் கடிதங்களை வாங்கிக் கொள்ளக் கை நீட்டினான்.

"ஸூப்பரின்டெண்டெண்ட்!"

இன்னொரு வேலைக்காரன் முன்னே வந்து தபால்களை வாங்கிக் கொண்டான்.—இதே மாதிரியாக இந்த ஸஹஸ்ர நாமாவளியை ஸார்ட்டர் விஷ்ணு பக்தனைப் போல் தினமும் பாராயணம் செய்வது வழக்கம்.

கடைசியில் எல்லாரும் போய் விட்டார்கள், அலியும் எழுந்துநின்று போஸ்ட் ஆபீஸுக்கு ஒரு கும்பிடு போட்டு விட்டு நடந்தான். ஒரு நூற்றாண்டுக்கு முந்திய நாட்டுப்புறத்தான் அவன்! அந்தக் கும்பிடுவதில் என்ன விந்தை இருக்கிறதோ, அது அவனுக்குத்தான் தெரியும்.

"இவன் பைத்தியக்காரனா என்ன?" என்று போஸ்ட் மாஸ்டர் கேட்டார்.

"யார், ஸார்?—ஓ! இந்த அலிபா? ஆமாம், ஸார்; ஐந்து வருஷங்களாக இவன் நாள் தவறாமல் கடிதம் வாங்கிக் கொள்ள வருகிறான். எந்தப் பருவமாயிருந்தாலுஞ்சரி, இவன் வரத் தவறுவதில்லை. இவனுக்குத் கடிதம் மட்டும் எப்போதும் வருவதைக் காணோம்" என்று குமாஸ்தா பதில் சொன்னான்.

"எவன் அப்படி வேலையில்லாமல் திண்ணைத் தூங்கி தடிராமனாய் உட்கார்ந்திருக்கிறான். இவனுக்குச் சதா கடிதம் எழுத?"

"ஸார், இவன் மூளையே கெட்டுப்போய்விட்டது. முன்பெல்லாம் இவன் பெரிய அநியாயங்கள் செய்வது வழக்கம். ஒரு தடவை ஏதோ ஒரு தேவஸ்தானத்தில் ஏதோ பாவம் செய்து விட்டான். அதன் பலனைத்தான் இப்போது அநுபவித்துக் கொண்டிருக்கிறான்!" என்றான் தபால்காரன்.

"பைத்தியக்காரர்களே மிகவும் விசித்திரமானவர்கள்."

"ஆமாம் ஸார். அகமதாபாத்தில் நான் ஒரு தடவை ஒரு பைத்தியக்காரனைப் பார்த்தேன். அவன் நாள் முழுதும் மண்ணைச் சேர்த்துக் குவித்துக்கொண்டே, இருப்பான். இதைத் தவிர அவனுக்கு வேறு ஒருவேலையுமில்லை. இன்னொரு பைத்தியக்காரனுக்கு நாள் தவறாமல் மாலை வேளையில் ஆற்றங்கரைக்குப் போய் ஒரு கல்லின்மீது தண்ணீர் கொட்டுவது வழக்கமாய்விட்டது!"

"ஸார், இதைக் கேளுங்கள். நான் பார்த்த ஒரு பைத்தியக்காரன் நாள் முழுதும் ஊரைச் சுற்றிக்கொண்டிருந்தான்; அது அவன் பழக்கம். இன்னொரு பைத்தியக்காரன் எப்போது பார்த்தாலும் பாட்டுப் பாடுவான்! இன்னுமொருத்தன் தன் கையாலேயே தன் தாடையில் அறைந்துகொண்டு வேறு யாரோ தன்னை அடித்ததாக நினைத்து ஓவென்று அழுவான்!"

அன்று போஸ்ட் ஆபீஸில் பைத்தியக்காரர்களின் புராணம் விமரிசனத்துக்கு வந்திருந்தது. எப்போதுமே இம்மாதிரியான ஓரிரண்டு விஷயங்களை வைத்துக்கொண்டு அவைகளைப் பற்றிப் பத்துப் பதினைந்து நிமிஷங்கள் பொழுதுபோக்குக்காகப் பேசி ஆனந்திப்பது, பெரும்பாலும் எல்லா வேலைக்காரர்களுக்கும் வழக்கமாயிருந்தது. கள் குடிக்கும் வழக்கத்தைப்போல. கடைசியில் போஸ்ட்மாஸ்டர் எழுந்து நின்று, நடந்து கொண்டே, "இந்தப் பைத்தியக்காரர்களுக்கும் ஒரு தனி உலகம் இருக்கும் போலிருக்கிறது! இந்தப் பைத்தியக்காரர்கள் நம்மை யெல்லாம் பைத்தியக்காரர்களென்று நினைத்துக்கொண்டிருப்பார்கள்; ஒருவேளை இவர்களுடைய சிருஷ்டியும் கவிகளின் சிருஷ்டியைப்போலிருக்கலாம்!" என்றார்.

கடைசி வாக்கியத்தைப் பேசும்போது போஸ்ட் மாஸ்டர் சிரித்துக்கொண்டே சென்றார். ஒரு குமாஸ்தா ஓழிவு கிடைக்கும் போதெல்லாம் கவிதைகள் எழுதுவது வழக்கம்; அதனால் அவனை எல்லாரும் பரிகாசம் செய்து வந்தார்கள். அதனால் தான் போஸ்ட்மாஸ்டரும் கடைசி வாக்கியத்தை அவனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே சொன்னார். போஸ்ட் ஆபீஸில் மீண்டும் முன்போலவே அமைதி குடிகொண்டது.

ஒரு தடவை கிழ அலி இரண்டு மூன்று நாட்கள் வரையில் போஸ்ட் ஆபீஸுக்கு வரவில்லை. அலியின் இதயத்தை அறிந்து கொள்ளக் கூடிய, அநுதாபம் நிறைந்த, விசாலமான நோக்கம் போஸ்ட் ஆபீஸில் எந்த மனிதனிடமும் இல்லை. ஆனால் அவன் வராததுபற்றி எல்லாருக்கும் ஆச்சரியமாயிருந்தது. அப்புறம் அலி வந்தான்; ஆனால், அன்று அவனுக்குச் சுவாசம் வாங்கிக்கொண்டிருந்தது. அவன் முகத்தில் வாழ்க்கையின் அந்தி நேரத்தின் அடையாளங்கள் தெளிவாகத் தென்பட்டன.

அன்று அலி அதைரியத்துடன், "ஸார், என் மரியமின் கடிதம் வந்ததா?" என்று போஸ்ட்மாஸ்டரைக் கேட்டான்.

போஸ்ட்மாஸ்டர் அன்று தம் ஊருக்குப் போகும் அவசரத்தில் இருந்தார். அந்தப் புதிய கேள்வியைப் பொறுத்துக் கொள்ளும்படி அவர் மூளை அவ்வளவு சாந்தமாக இல்லை.

"நீ என்ன மனிதனடா!" என்றார்.

"என் பெயர் அலி" என்று அலி சம்பந்தமில்லாமல் பதில் சொன்னான்.

"அது சரி; இங்கே உன் மரியமின் பெயரை யாராவது எழுதி வைத்துக்கொண்டிருக்கிறார்களா, என்ன?"

"எழுதிக் கொள்ளுங்கள், ஐயா! ஒரு வேளை எப்போதாவது கடிதம் வந்து, அப்போது நான் இங்கே இல்லாமலிருந்தால், உங்களுக்குத் தொந்தரவு இல்லாமலிருக்கும்!"

தன் ஆயுளின் முக்கால் பகுதியை வேட்டையில் கழித்தவனுக்கு, மரியமின் பெயர் அவள் தந்தையைத் தவிர மற்றவர்களுக்கு இரண்டு காசுகள் பெறாதது என்பது எப்படித் தெரியும்!

போஸ்ட்மாஸ்டர் கோபத்துடன், "பைத்தியம் பிடித்து விட்டதா உனக்கு? போடா இங்கிருந்து! உன் கடிதம் வந்தால் இங்கே அதை யாரும் சாப்பிட்டுவிட மாட்டார்கள்!" என்றார்.

போஸ்ட்மாஸ்டர் வேகமாகப் போய்விட்டார். அலி மெதுவாக நடந்து வெளியே வந்தான். ஒரு தடவை திரும்பி அவன் போஸ்ட் ஆபீஸைப் பார்த்தான்! அன்று அவன் கண்களில் அநாதைகளது போன்ற கண்ணீர் துளிர்த்திருந்தது. அவனிடம் சிரத்தை இருந்தது; ஆனால் தைரியம் முடிவடைந்தது. அந்தோ! இனி மரியமின் கடிதம் அவனுக்கு எப்படிக் கிடைக்கும்!

ஒரு குமாஸ்தா அவன் பின்னால் வந்தான். அவன் திரும்பிப் பார்த்தான்; "தம்பி!" என்று கூப்பிட்டான்.

குமாஸ்தா திடுக்கிட்டான்; ஆனால் அவன் நல்ல மனிதன். "ஏன்?" என்று கேட்டான்.

"இதோ பார், என்னிடம் இருப்பது இதுதான்!" என்று சொல்லி அலி ஒரு பழைய டப்பியிலிருந்து ஐந்து ஸவரன்களை வெளியே எடுத்தான். குமாஸ்தா மீண்டும் திடுக்கிட்டான்.

"திடுக்கிட்டுப் போகாதே! உனக்கு இவை மிகவும் உபயோகமுள்ளவையாயிருக்கும். இனி இவை என்னிடம் இருந்தும் பிரயோஜனமில்லை. ஆனால் நீ எனக்கு ஒரு வேலை செய்வாயா?"

"என்ன?"

"அதோ, மேலே என்ன தெரிகிறது?" என்று அலி சூனிய ஆகாயத்தை விரலால் சுட்டிக் காட்டினான்.

"ஆகாயம்!"

"மேலே அல்லா இருக்கிறான். அவன் சாக்ஷியாக உனக்கு இந்த ஸவரன்களைக் கொடுக்கிறேன். என் மரியமின் கடிதம் வந்தால் அதை என்னிடம் சேர்ப்பித்து விடு!"

குமாஸ்தா ஆச்சரியத்தால் ஸ்தம்பித்து நின்றான். "எங்கே எவ்விடத்துக்குச் சேர்ப்பிக்க வேண்டும்?" என்று கேட்டான்.

"என் சமாதிமேல் சேர்ப்பிக்க வேண்டும்!"

"அடே! என்னடா இது?"

"உண்மையாகச் சொல்லுகிறேன். இன்று என் கடைசி நாள்! ஐயோ! கடைசி தினம்! மரியமும் வரவில்லை—அவள் கடிதமும் வரவில்லை!"

அலியின் கண்களில் ஒருவித மயக்கம் இருந்தது, குமாஸ்தா மெதுவாக அவனை விட்டு விலகிச் சென்றான். அவன் சட்டைப்பையில் ஐந்து ஸவரன்கள் இருந்தன.

* * * *

அதற்கப்புறம் அலி எப்போதும் தென்படவேயில்லை. அவனைத் தேடவேண்டுமென்ற கவலையும் யாருக்கும் இல்லை. ஒரு நாள் போஸ்ட்மாஸ்டர் கொஞ்சம் வருத்தத்தோடு இருந்தார். ஊரில் அவர் பெண் காயலாயிருந்தாள்; அவள் தேக சௌக்கியத்தைப் பற்றிய தகவலை எதிர்பார்த்து, அவர் துன்பத்திலாழ்ந்தவராய் உட்கார்ந்திருந்தார்.

தபால் வந்தது; கடிதங்கள் ஒரே குவியலாகக் கொட்டப்பட்டன. போஸ்ட் மாஸ்டர் ஒரு கவரைத் தமதென்று நினைத்துச் சட்டென்று கையில் எடுத்தார்; ஆனால் அதன்மீது "கோச்மான் அலிபாபா" என்று விலாசமிட்டிருந்தது.

மின்சாரத்தில் தாக்கப்பட்டவர் போல, அவர் அக்கடிதத்தை கீழே எறிந்தார். துன்பம், கவலை இவைகளின் ஆதிக்கத்தில், சில நிமிஷங்கள் வரை அவருடைய ஆபீசரது போன்ற கடுமையான சுபாவம் போய்விட்டது; மனித சுபாவம் தலைகாட்டியது. இது அந்தக் கிழவனின் கடிதமே என்றும், ஒருவேளை அவன் பெண் மரியம் அனுப்பியிருக்கலமென்பதும் திடீரென்று அவர் ஞாபகத்துக்கு வந்தன.

"ராமதாஸ்!" என்று அவர் கூப்பிட்டார்.

அலி அன்று ஸவரன்கள் கொடுத்தானே அந்த குமாஸ்தாவின் பெயர்தான்-ராமதாஸ்.

"என்ன ஸார்?"

"இதோ உன் கோச்மான் அலிபாபாவின் கடிதம்! இப்போதெல்லாம் அவன் எங்கே, வருவதே யில்லையே?"

"அவனைத் தேடிப் பார்க்கிறேன்"

அன்று போஸ்ட்மாஸ்டரின் பெண்ணைப்பற்றிய செய்தி வரவில்லை. இரவு முழுவதையும் அவர் சந்தேகங்களிலும் வருத்தத்திலுமே கழித்தார். மறுநாள் காலையில் மூன்று மணிக்கு அவர் ஆபீஸில் உட்கார்ந்திருந்தார். நான்கு மணிக்கு அலி வருவானென்றும், தம் கையால் அந்தக் கடிதத்தை அவனிடம் கொடுத்து விடலாமென்றும் அன்று அவர் எண்ணியிருந்தார்.

அலிபாபாவின் நிலைமையை போஸ்ட்மாஸ்டர் இப்போது அறிந்து கொண்டுவிட்டார். இன்றிரவு முழுதையும் அவர் காலையில் வரப்போகும் கடிதத்தின் தியானத்தில் கழித்திருந்தார். ஐந்து வருஷகாலம் இவ்விதமாக இடையறாத இரவுகளைக் கழித்தவனிடம் இன்று முதல் தடவையாக அவருக்கு அநுதாபம் உண்டாகி, அவர் உள்ளம் கசிந்துருகியது. சரியாக ஐந்து மணிக்கு யாரோ கதவைத் தட்டினார்கள். தபால்காரர்கள் இன்னும் வரவில்லை; ஆனால் அலிதான் கதவைத் தட்டியிருப்பானென்று அவருக்குத் தோன்றிற்று. அவர் நாற்காலியிலிருந்து எழுந்து, தந்தையுள்ளத்தின், துன்பத்தை அநுபவித்துக் கொண்டே, ஒரே பாய்ச்சலில் சென்று கதவைத் திறந்தார்.

"வா அப்பா அலி! இந்தா உன் கடிதம்!"

வாசலில் ஓர் ஏழைக் கிழவன் தடியை ஊன்றிக்கொண்டு நின்றிருந்தான். கடைசிக் கண்ணீர் பெருகியோடிய அடையாளம் இன்னும் அவன் கன்னத்தி

விருந்து. அழியவில்லை, அவன் முகத்திலிருந்த சுருக்கங்களில், கடுமையாகிய நிறத்தின்மீது, பெருந்தன்மையாகிய தூலிகை தீட்டப்பட்டிருந்தது.

அவன் போஸ்ட் மாஸ்டரைப் பார்த்தான்; அவருக்குத் தூக்கி வாரிப்போட்டது. கிழவனின் கண்களில் மனித ஒளி இல்லை!

"யார் ஸார் அது? அலியா என்ன?..." என்று கேட்டுக்கொண்டே, ராமதாஸ் ஒரு புறமாக வந்து வாசலண்டை நின்றான்.

போஸ்ட் மாஸ்டர் அந்தப் பக்கம் கவனிக்காமல் வாசலையே பார்த்துக் கொண்டிருந்தார். அங்கே யாரையும் காணவில்லை. ஆச்சரிய மிகுதியால் அவர் கண்களைப் பரக்கவைத்துக்கொண்டே நின்றார். 'வாசலில் யாருமில்லையே? இதென்ன?' என்று நினைத்து, ராமதாஸின் பக்கமாகத் திரும்பினார்.

"யார் அது? அலிபாபா தானே நிற்பது!" என்று கேட்டார்.

"ஸார், அலிபாபா செத்துப் போய்விட்டான்! ஆனால் அவன் கடிதத்தை என்னிடம் கொடுங்கள்."

"அடே! எப்போது செத்துப் போனான்? உண்மையாகவா சொல்லுகிறீர்கள், ராமதாஸ்?"

"ஆமாம், ஸார், அவன் செத்துப்போய் ஏறக்குறைய மூன்று மாதங்களாயினவே!" என்று எதிரே வந்துகொண்டிருந்த ஒரு தபால்காரன் பதில் சொன்னான்.

போஸ்ட் மாஸ்டர் திக்பிரமையடைந்து நின்றார், மரியமின் கடிதம் இன்னமும் வாசலிலேயே விழுந்து கிடந்தது, அலியின் உருவும் அவர் கண்முன் நின்றது. தான் கடைசி தினத்தன்று ராமதாஸைச் சந்தித்த வரலாற்றையும் அவன் அவரிடம் கூறினான். போஸ்ட் மாஸ்டரின் காதுகளில் அவன் வாசலைத் தட்டிய சத்தமும், அவர் கண்களின் முன்பு அவனுடைய உருவமும் நின்றன. 'நான் அலியைத்தான் பார்த்தேனா அல்லது அது பிரமையா? அல்லது ராமதாஸைத்தான் பார்த்து பிரமித்தேனோ?' என்ற சந்தேகத்தில் அவருள்ளம் ஆழ்ந்தது.

மீண்டும் தினசரி வேலை ஆரம்பமாயிற்று. "போலீஸ் கமிஷனர்! சூப்பரிண்டெண்டெண்ட்! லைப்ரேரியன்!" என்று ஸார்ட்டர் வேகமாகக் கடிதங்களை எறிந்துகொண்டிருந்தான்.

ஆனால் அன்று போஸ்ட் மாஸ்டர் ஒவ்வொரு கடிதத்தையும் அதில் துடிக்கும் உள்ளம் இருப்பது போன்ற பாவனையோடு கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார். 'கவர் ஒன்றே காலணாவும், கார்டு முக்காலணாவும் விலையுள்ளன என்ற அவருடைய எண்ணம் அன்று மறைந்தது. 'நேரே ஆப்ரிக்காவிலிருந்து தன் விதவைத் தாய்க்குப் பிள்ளை—அவன் தாயின் ஒரே பிள்ளை—கடிதம் எழுதினால் அது எப்படி இருக்கும்?" என்ற ஆழ்ந்த சிந்தனையில் அவர் மூழ்கியிருந்தார்.

மனிதன் தன் நோக்கத்தைத் துறந்து பிறர் நோக்கங்கொண்டு பார்ப்பானாயின் பாதி உலகம் சாந்தமாகிவிடும்.

* * * *

அன்று சாயங்காலம் ராமதாஸும் போஸ்ட்மாஸ்டரும் அலியின் சமாதியை நோக்கி மெதுவாகப் போய்க்கொண்டிருந்தனர். மரியமின் கடிதம் அவர்களிடமே இருந்தது. சமாதியின்மீது கடிதத்தை வைத்துவிட்டு அவர்கள் திரும்பினார்கள்.

"ராமதாஸ், இன்று காலை நீங்கள்தான் எல்லாருக்கும் முன்னே வந்தீர்களா?"

"ஆமாம் ஸார்"

"அப்போது அலிபாபா...... என்று நீங்கள்தானே சொன்னீர்கள்?"

"ஆமாம்."

"ஆனால் — அப்படியானால்... புரியவில்லையே...?"

"என்ன புரியவில்லை?"

"ஆமாம், சரிதான்...ஒன்றுமில்லை" என்று போஸ்ட் மாஸ்டர் உடனே விஷயத்தை மாற்றிவிட்டார். போஸ்ட் ஆபீஸின் தாழ்வாரம் வந்ததும் ராமதாஸ் அவரிடம் விடைபெற்றுச் சென்றான். அவர் ஏதோ யோசனை செய்துகொண்டே உள்ளே போனார். தம் தந்தையுள்ளம் அலியை அறிய முடியவில்லையே என்று அவர் இதயம் வேதனைப்பட்டது. மேலும், அன்றும், அதுவரையிலும் அவர் பெண்ணின் தேக நிலையைப் பற்றிய செய்தி ஒன்றும் வரவில்லை. ஆகையால் மீண்டும் அதே கவலையில் இரவைக் கழிக்கவேண்டி இருந்தது. ஆச்சரியம், சந்தேகம், பச்சாதாபம் என்ற மூன்று தாபங்களாலும் எரிக்கப்பட்டவராய் அவர் தம் ஆபீஸில் வந்து உட்கார்ந்தார். அருகில் தைத்திருந்த கணப்பிலிருந்து கரித்தணலின் மெதுவான உஷ்ணம் அவர் மேல் பட்டது.

மாப்பிள்ளை மிடுக்கு

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தாலூகா ஆபீஸ் அட்டெண்டர் மகா-ா-ா-ஸ்ரீ மாருதி ரங்கமும் அவரது மிஸஸ்ஸும் மாட்டு வண்டியில் வீட்டிற்குத் திரும்பினார்கள். வரும் வழியில் "இப்படியெல்லாம் நடக்கும்னு தெரிஞ்சு தானே பையை எடுத்துகிட்டு வராமெ டக்கு பண்ணினீங்க?" என்றாள் செல்லம்.

"அடி பைத்தியமே, பையை வீட்டிலா வைத்திருக்கேன்! இதோ பார், என் படுக்கைக்குள்ளே! அப்படிச் சொல்லாவிட்டால் எப்படியம்மா திரும்பி வரது?" என்றார் மிஸ்டர் மாருதி ரங்கம்.

மறு நாள் ரயிலுக்குக் கிளம்ப மாருதி அவர்கள் முயற்சி பண்ணுவது போல் பாசாங்கு செய்தாலும் எங்கே நடக்கும்? ஒரு வாரம் 'காம்ப்' தான்!

சூதகம் நின்றிருந்தால்

3 நாட்டுகள் என்னும் மாத்திரைகளை 3 நாளைக்கு உபயோகித்தால் ஒழுங்கு பட்டுவிடும். ஒவ்வொரு ஆர்டருடன் உத்தாவாதம் அனுப்பப்படும். விலை ரூ.5/8. பத்து ஷிலிங். Dr. S. H. KHAN, (S. M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

டோங்ரேயின்

பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற

குழந்தைகளின் டானிக்

TI. 2898,

வாடா மலர்

புதிய தொடர் கதை

தி. நா. சுப்ரமணியம் எழுதியது

"ஏன் இவ்விதம் மெதுவாகப் போய்க்கொண்டிருக்கிறது?" அந்தக் குரலில் கம்பீரம் தலைதூக்கி நின்றது; அதனுடன் சிறிது வருத்தமும் ஆத்திரமும் கலந்து தொனித்தன.

"ஏனுதி, எங்களால் கூடுமான வரையில் வேகமாகவே தோணியைச் செலுத்திக்கொண்டிருக்கிறோம். ஆனால் காற்று நன்றாக வீசவில்லையே?"

நாவாய்க்காரர்கள் மிக்க பணிவுடனே தெரிவித்துக்கொண்டாலும், அவன் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. "காற்று அடிக்கவில்லையா? இதைவிடத்தான் பிய்த்துக்கொண்டு போகுமோ? பாய்களைச் சரியாகக் கட்டுங்கள்?" இவ்விதம் சொல்லிவிட்டு அவன் கேலியாகச் சிரித்தான்.

நினைவு தெரிந்த பிராயம் முதல் உப்புத் தண்ணீரிலேயே கிடந்து, உழன்று, கடலில் படகுகளைச் செலுத்தும் மாலுமிகளுக்கு தொழில்முறை நுணுக்கங்களைக் கூற அவன் முன் வந்தது அவனுக்கே ஆச்சரியமாகவோ அசம்பாவிதமாகவோ தோன்றவில்லை. வேறு சமயமாக இருந்தால் அவன் அவ்விதம் சொல்லியிருக்கமாட்டான். மரக்கலத்தின் கதியை அவர்கள் வழியிலேயே விட்டிருப்பான். ஆனால் இப்போதோ அவன் கரை சேரும் நேரத்தை எதிர்பார்த்து துடித்துக்கொண்டிருந்தான். அவன் மனத்தில் எழுந்த வேகமே அவனை அப்படிக் கூறத் தூண்டியது.

நாவாய்க்காரர்கள் அவனுக்குப் பதில் சொல்லவிரும்பவில்லை. அவ்விதம் வார்த்தையை வளர்த்துவதால் பயன் ஒன்றும் ஏற்படாது என்பதை அவர்கள் அறிந்து கொண்டனர். எப்படியும், அவன் எஜமானன்; அவர்கள் வேலைக்காரர்கள். மீகாமன், "அப்படியே செய்கிறோம்" என்று சுருக்கமாகக் கூறிவிட்டுப் போய்விட்டான்.

ஆயினும் அவன் தலைவன் விருப்பத்தை அலட்சியம் செய்ய மாட்டாதவனாய்ப் பாய்மரத்தின் சமீபம் சென்றான்; பாய்களை அவிழ்த்து இந்தப்புறமும் அந்தப்புறமும் ஆக மாற்றித் திருப்பிக் கட்டிப் பார்த்தான். ஆனால் தோணியின் வேகத்திலோ எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. பாய்கள் சரியாகவே காற்றுவாக்கில் கட்டப்பட்டிருந்தன.

அப்போது பகல் பதினெட்டு நாழிகைப் பொழுதிருக்கும். சூரியன் வானத்தின் உச்சியிலே கொஞ்சம் மேற்கே சாய்ந்து உக்கிரமாகக் கொளுத்திக்கொண்டிருந்தான். கடலில் நாற்புறமும் எங்கே பார்த்தாலும் அமைதி நிலவியது. கொந்தளிக்கும் கடலும் கதிரவன் வெப்பம் தாங்காமல் அடங்கிக் கிடந்தது. நிர்மலமான வானமும், அக்கினிப் பிழம்பு போல எரியும் சூரியனும் கட்லில் பிரதிபலித்துச் சிற்றலைகளால் பிரதிபிம்பங்கள் சிதறுண்டு பார்ப்பவர் கண்களைக் கூசவைத்தன. அந்த நிலைமையில் காற்று எப்படி வீசும்?

எனினும் கொஞ்சமும் காற்று இல்லாமலும் இல்லை. உவர்நீரால் வெப்பம் அதிகமாக ஏறிய உஷ்ணக் காற்று, தோணியின் தளத்தில் நிற்பவர்மீது நெருப்பைக் கக்குவதுபோன்று மெல்ல அசைந்துகொண்டிருந்தது. சலனமே இல்லாமல் இருந்திருந்தால் மாலுமிகள் துடுப்புகளைக் கொண்டாவது படகைத் தள்ளியிருப்பார்கள். அதற்கும் வழியில்லாமல் போய்விட்டது.

அன்றி, அந்த மரக்கலம் தனியாகச் சென்றுகொண்டிருக்கவில்லை. ஐம்பது கலங்கள் கொண்ட கூட்டத்துள் அதுவும் ஒன்று. மற்றப் படகுகளைவிட்டு அதனை மட்டும் வேகமாகச் செலுத்திச் செல்ல மாலுமிகள் உடன்படவில்லை. அவ்விதம் தனியாகப் பிரிந்து முன்னதாகச் சென்றால் ஒருகால் தங்களுக்கு ஏதேனும் விபத்து நேரிடவும் கூடும் என்று அவர்கள் பயந்தனர் போலும்!

அந்தப் பக்கங்களிலே கடற்கொள்ளைக்காரர்கள் அதிகம். எட்டு, பத்து கலங்கள்கொண்ட கூட்டத்தையே அவர்கள் தாக்கிக் கொள்ளையடித்துக்கொண்டு போய்விடுவார்கள். அப்படியிருக்க ஒன்றியாக அவர்களிடம் அகப்பட்டுக்கொண்டால் தப்புவது ஏது?

ஒவ்வொரு படகிலும் அதன் பாதுகாப்புக்கெனப் போர் வீரர்கள்சிலரைஏற்றிக்கொண்டு போவது உண்மையே. ஐம்பது படகுகளும் கூட்டமாகச் சென்றால், அவற்றில் உள்ள வீரர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து தங்களைத் தாக்கும் கொள்ளைக்காரர்களை எதிர்த்துச் சண்டையிட்டு வெற்றிகொள்ளமுடியும். தனியாக அகப்பட்டுக் கொள்ளும் ஒன்றிரண்டு கலங்களில் உள்ளவர்களால் அது சாத்தியமில்லை.

அதனால் எந்தப் படகும் கூட்டத்தைவிட்டுப் பிரிந்து நெடுந்தூரம் சென்றுவிடாது. கூப்பிடு தூரத்திலேயே ஒவ்வொன்றும் போய்க்கொண்டிருந்தது. எனினும் அலைகடல்மீது வெட்டவெளியில் மிதந்துவரும் காற்று எதனாலும் தடைப்படாமல் தங்கள் கலங்களின் பாய்களின்மீது நேரே தாக்கும்படியாக அவர்கள் விலகி விலகிச்சென்றுகொண்டிருந்தனர்: தவிரவும் ஒன்றையொன்று நெருங்கிவிட்டால், அதனால் ஏற்படும் அலைகளால் கலங்களுக்கு அதிகமான ஆட்டமும் உண்டாகுமன்றோ?

தலைவனைப்போலவே வேலைக்காரர்களும் எப்போது கரை தொட்டு நங்கூரம் பாய்ச்சிக் கீழே இறங்கப்போகிறோம் என்பதை எதிர்பார்த்திருந்தனர். அவர்கள் ஊரைவிட்டுக் கிளம்பி நான்குவாரகாலம் ஆகிவிட்டது. அவர்கள் கிளம்பியதிலிருந்து, பொழுது விடிந்தது முதல் சூர்யாஸ்தமனம் வரை, எங்கே பார்த்தாலும் ஒரே ஜலப் பரப்பைத் தான் கண்டு வந்தார்கள். கவனத்தை இழுக்கக்கூடிய வேறு தோற்றம் எதுவும் இல்லாமல் ஒரே காட்சியை அவர்களால் எவ்வளவு நாட்கள்தான் பார்த்திருக்க முடியும்? அவர்களுக்கு அலுப்பும் சலுப்பும ஏற்பட்டு விட்டன.

பொழுது கொஞ்சம் கொஞ்சமாக ஏறியது. சூரியனும் மேல் வானத்தில் நன்றாகச் சாய்ந்து வந்தான். வெயிலின் உக்கிரமும் சிறிது தணிந்தது, கடலில் ஏற்பட்ட கொதிப்பு கொஞ்சம் அடங்கியது. இளந் தென்றல் மெதுவாக வீச ஆரம்பித்தது. அந்த வேகத்தில் அது பாய்களைத் தாக்கித் தோணிகளை நன்றாக உந்தித் தள்ளியது.

மாலை இளங்காற்று எல்லோர் மனத்தையும் சாந்தப்படுத்தியது. அதனுடன் பக்ஷிகளின் சப்த ஜாலங்களும் காற்றில் மிதந்து வந்து அவர்கள் காதுகளிலே அமிர்த வர்ஷம் போலப் புகுந்தன. பகல் முழுவதும் இரை தேடுவதற்காகப் பறந்து திரிந்த அவை தங்கள் கூண்டுகளுக்குத் திரும்பச் சென்று கொண்டிருந்தன. அந்திப் பொழுதின் ஆனந்தத்தை அவையும் அனுபவித்தன போலும்! எவ்விதமாயினும் கரை சமீபத்திலேயே இருக்கிறது என்பதை உணர்த்தும் அந்தப் பக்ஷிகளின் ஓசையைக் கேட்டவுடனே மாலுமிகள் மெய்மறந்து கூத்தாடினர். அதற்குப் பிறகே அவர்களுக்கு ஜீவகளை உண்டாயிற்று.

சாத்தனுக்கும் உள்ளம் குளிர்ந்தது. அவன் முன்னர் முகர்ந்த இன்பங்கள் யாவற்றையும் எண்ணி மகிழ்ந்தான். அன்றைப் பகல் முழுதும் அவன் சிறிதும் படுக்கவில்லை வெயிற் பொழுதில் அவன் உள்ளத்தே கொழுந்து விட்டுக் கிளம்பிய தாபம் அவனை எரித்து வாட்டியது. அவனால் ஓரிடத்தில் நிலைத்திருக்க முடியவில்லை. மாலையின் ரம்மியத்திலோ அவன் தன் வரவை எதிர்நோக்கி வழி பார்த்திருக்கும் அந்தோணியாவின் நினைப்பிலே லயித்திருந்தான். அவனுக்கு எப்படித் தூக்கம் வரும்? உள்ளுக்குள் அடங்கிக் கிடந்த ஆசை உணர்ச்சிகள் யாவும் வெளிப்பட்டன. பழைய சம்பவங்கள் ஒன்றன் பின் ஒன்றாக அவன் மனத்திரையிலே தோன்றி மறையலாயின.

சென்ற வருஷமும் இதே சமயத்தில் சாத்தன் இதைப் போலவே கடற்பிரயாணம் செய்து வந்தான். அதுதான் அவன் முதன் முதலாகச் செய்த கடற்பிரயாணம்; அதுவே அவன் தமிழ் நாட்டை விட்டு வெளிக் கிளம்பிய முதற் பயணம். சொந்த ஊரிலிருந்து வெளியே சுற்றித் திரிந்த அந்த ஆறுமாத காலமும் அவனுக்கு உல்லாஸ யாத்திரையாகவே இருந்தது. அதுவரையில் என்றும் அறியாத புது அனுபவங்களைப் பெற்றான்.

சாத்தன் நல்ல காளைப்பருவத்தினன்; சுமார் முப்பது வயது உடையவன். ஆயினும் அவனைப் பார்த்த யாரும் அவனுக்கு இருபத்தைந்து பிராயத்துக்கு மேல் இருக்காது என்றே மதிப்பிடுவர். தீர்மையான மூக்கும், பரந்த கண்களும், அடர்ந்த மீசையும்வாய்ந்த அவன் அழகுத் தெய்வத்தின் – மன்மதனுடைய–அவதாரம் என்றே கருதப்படுவதில்ஆச்சரியமில்லை.

என்றைக்கும் வீட்டுக்குள் அடைந்து கிடக்காமல் இயற்கை வெளிகளிலேயே சுற்றித் திரிந்த அவன் உடல் சூரியக்கிரணம் பட்டுக் கறுத்து வந்தது. ஆயினும் இளமையும் பருவத்துக்கேற்ற முறுக்கும் பெற்றிருந்த அவனை யாரும் அலட்சியமாகப் பார்த்துச் செல்லமுடியாது. கண்டோரைத் தன்வசம் இழுக்கும் சக்தி அவனிடம் காணப்பட்டது.

அவன் பாண்டிநாட்டைச் சேர்ந்தவன். தலைமுறை தலைமுறையாக திரைகடல் ஓடித் திரவியம் தேடிய பழைய பரம்பரையில் வந்தவன். இவ்வளவு நாளும் வெளிக் கஷ்டம் ஒன்றையும் அவனுக்குக் கொடுக்காமல் கப்பலேறிப் பிறநாடுகளுக்குச் சென்று வணிகம் செய்து வந்தார் அவனுடைய தந்தை எவ்வளவு காலம் தான் அவர் அவ்விதம் சென்று வர முடியும்? தள்ளாத அந்தக் கிழவயதில் அவரை வெளியூருக்கு அனுப்புவதற்கு ஆகுமா? மற்றவர்களும் பார்த்துச் சும்மா இருப்பாரோ?

தந்தை கடல் கடந்து வியாபாரம் செய்து வந்த காலத்தைச் சாத்தன் வீண் பொழுதாகக் கழிக்கவில்லை. "குலவிச்சைக்கல்லாமல் பாகம் படும்" அன்றோ? உள்நாட்டு வியாபாரத்தைக் கவனித்து வந்தான். அவனுடைய பரம்பரையைச் சேர்ந்தவர்கள் எல்லோருமே கப்பல் வியாபாரிகள். யவனத்திலிருந்தும் சீனத்திலிருந்தும் தமிழ் நாட்டுக்கு வந்து வாணிபம் செய்த பலரும் சாத்தனை நன்றாக அறிவார். அவர்கள் எவ்விதமான பயமும் இன்றித் தாங்கள் கொணர்ந்த பொருள்களைச் சாத்தனிடம் ஒப்படைத்துத் தக்க விலைக்கு விற்றுவிடும்படி அவனையே கேட்டுக்கொள்ளுவார்கள்.

அதே போலத் தங்களுக்கு வேண்டிய பொருள்கள் எவை எவை என்பதையும் குறித்துக் கொடுத்து, குறைந்த விலையில் உயர்ந்த சரக்குகளை வாங்கித் தரும்படியும் அவனை வேண்டுவர். அவன் அவர்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவனாகவே விளங்கினான். அவன் அவர்களை ஒரு பொழுதும் ஏமாற்றியதில்லை. அவர்களுக்கும் அந்த நம்பிக்கை அவனிடம் ஏற்பட்டிருந்தது.

தந்தையின் தள்ளாமையைக் கண்டு சிறிதே மனஞ்சலித்தான் சாத்தன். எனினும் அதை நீடிக்க விடவில்லை. அவருடைய சுமையைத்தன் தோளால் தாங்குவது என்று தீர்மானித்து அதற்குத் தன்னை உரியவனாக்கிக் கொண்டான்.

"அப்பா, எவ்வளவு காலம் தான் நீங்கள் வெளியூருக்குப் போய் வருவது? போன இடத்தில் தங்களுக்கு ஏதாவது காலையோ தலையையோ வலித்தால் நாங்கள் என்ன செய்வோம். உங்களுக்கும் வயதாகிவிட்டது

இனி நீங்கள் வீட்டோடு தங்கிவிடுங்கள். வியாபாரத்தை நானே பார்த்து வருகிறேன்."

ஒருநாள் சாத்தன் தன் தந்தையைப் பார்த்து இவ்விதம் கூறினன். கிழவரும் ஒருவாறு இதனை எதிர்பார்த்திருந்தனர் என்றே சொல்லவேண்டும். ஏதோ வேண்டிய அளவு சம்பாதித்தாகிவிட்டது; இருப்பதைக்கொண்டே ஈரைந்து தலைமுறைகள் கஷ்டப்படாமல் சுகஜீவனம் செய்யலாம்: எனினும் வியாபாரத்தில் அவ்விதம் அசட்டையாக இருக்க முடியாது: ஒரு தடவை நிறுத்திவிட்டால் மறுபடியும் அதைத் துவக்கமுடியாது: அப்படியே ஆரம்பித்தாலும் பழைய பெருமை கிட்டுவது துர்லபம்: வாடிக்கைகள்போய்விடும்: நிலுவைகளும் சரியாக வசூலாகாது.

இதனை நன்கு அறிந்திருந்தார் கிழவர். ஆகவே வியாபாரத்தை நிறுத்திவிடாமல் தானே தொடர்ந்து அதை நடத்தி வருவதாகத் தம் குமாரன் கூறியதைக் கேட்டதும் அவர் உள்ளப் பூரிப்பை அடைந்தார்.

அதுமட்டுமோ? வணிகத் துறையில் மேம்பட்டு விளங்குபவர்களுக்கு நாட்டிலே மதிப்பும் அரசாங்கத்தில் செல்வாக்கும் ஏற்பட்டு, அவர்கள் பிரமுகர்களாக விளங்குவதைக் கிழவர் கண்கூடாகக் கண்டிருக்கிறார். அப்பெருமையை அவர்கள் பரம்பரை அனுபவித்தே வருகிறது. தம்முடைய நற்பெயரைச் சாத்தன் சிறிதும் குறைவு படுத்தாமல் நிலை நிறுத்துவான் என்ற நம்பிக்கையும் அவருக்குத் திடமாக இருந்தது. அதனால் அவர் சாத்தன் வேண்டுகோளுக்கும் கொஞ்சமும் தடைசொல்லவில்லை; சம்மதித்துவிட்டார்.

சாத்தன் யவன தேசத்துக்குப் புதியவனேயன்றி யவனர்களை அறியாதவன் அல்லன். மதுரைமாநகரிலே யவனச்சேரியில் உள்ளவர்களுடன் அவனுக்கு நெருங்கிய பழக்கம் உண்டு. அவர்களுடைய பழக்கவழக்கங்களை அவன் நன்கு அறிவான். அவர்களுடைய பாஷையிலே தடங்கல் சிறிதும் இல்லாமல் சரளமாகப் பேசுவான். அவர்கள் விரும்பும்விதமே கவிதைச் சுவையை அள்ளி வீசி, மனங்கனியப்பேசி, அவர்களை மயக்கித் தன் வசமாக்குவதில ஸமர்த்தன்.

ஆயினும் அலெக்ஜாந்திரியாவில் அவன் கண்டகாட்சி அவனைப் பிரமிக்கச் செய்து விட்டது. அவ்விதம் இருக்கும் என்று அவன் கனவிலும் கருதவில்லை. தன் தேசத்திலே வசித்து வந்த யவனர்களை அலெக்ஜாந்திரியாவில் உள்ளவர்களுக்கு எவ்விதத்திலும் ஈடாகச் சொல்ல முடியாது என்பதைக் கண்டுகொண்டான். அந்த நகரத்தைப் பார்த்தவுடனே அவன் உண்மையில் அது பூலோகத்தில்தான் இருக்கிறதா என்ற சந்தேகத்தை அடைந்தான் என்றே கூறவேண்டும்.

அந்தத் தடவையும் அவனைப் போலவே வியாபாரத்துக்காக வெளிநாட்டார் பலர் உடன் வந்திருந்தனர். அவர்களுள் மணிபல்லவத்திலிருந்து வந்திருந்த நாகன் என்பவனோடு சாத்தன் தங்கியிருந்தான் நாகன் அந்தத் துறையில் பழகிய பேர்வழி; பத்து வருஷ காலத்துக்கு மேலாக அலெக்ஜாந்திரியாவுக்கு வந்து போய்க்கொண்டிருப்பவன்; ஒரு 'ஷோக்' ஆஸாமி. சாத்தனும் புதிய இடத்தில் தனக்குப் பரிசயம் ஏற்படும் வரையில் அந்த இடத்துப் பழக்கவழக்கத்தை அறிந்த ஒருவனுடைய துணை கிடைத்ததை நினைத்து மகிழ்ந்திருந்தான். நாகனே பாண்டி நாட்டுப் பிரதம வணிகனைச் சிறிது காலமாவது உபசரிக்கும் பெருமை தனக்குக் கிடைத்ததை எண்ணிச் சந்தோஷப் பட்டான். அன்றி, சாத்தனுடைய தந்தையிடமிருந்து தான் அடைந்துள்ள உதவிகளுக்கு தான் செய்யக்கூடியது எவ்விதத்திலும் அதிகமாகாது என்பதையும் அவன் அறிவான்.

அங்கே வந்து சேர்ந்த மறுநாள் மாலையில் அவ்விருவரும்வெளியே உலவி வரப் புறப்பட்டுச் சென்றார்கள். ஊரைச்சுற்றிப் பார்த்துப் பொழுது போக்க எண்ணிய அவர்கள், நாகாமத்தியினின்றும் கிளம்பி நெடுந்தூரம் நடந்து விட்டனர், ஜன நெருக்கம் உள்ள இடத்தைத் தாண்டிப் பிரமுகர்கள் வாசம் செய்யும் நகர்ப்புறத்தை நெருங்கி விட்டனர்.

மேற்றிசையில் அந்திச் சூரியன் மலைவாயினின்றும் தன் செக்கர் வர்ணத்தைப் பூமியில் எங்கும் பரப்பி அழகு பெறச் செய்து வந்தான். மாலை வெயில் பட்ட பொருள்கள் யாவும் தங்கத்தால் வார்க்கப்பட்டனவே போல மின்னின.

சாலையின் இரு மருங்கிலும் விசாலமான தோட்டங்களின் மத்தியில் அமைக்கப்பட்டிருந்த மாளிகைகளிலிருந்து ஆடல் பாடல்களின் இனிய நாதம் காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தது. நடுநடுவே ஒன்றிரண்டு இடங்களில் மதுவின் மயக்கத்தால் ஏற்பட்ட கலகலப்பும் கேட்டது.

எங்கே பார்த்தாலும் குதூகலமும் கொண்டாட்டமுமே. அவை சாத்தனையும் பற்றிக்கொண்டன. பொழுது போவதை அறியாமலும், வழி நடையில் சலிக்காமலும், அவன் ஆனந்தத்தில் மூழ்கி நாகனைத் தொடர்ந்து சென்றுகொண்டிருந்தான். அவன மனம் எங்கெல்லாமோ சஞ்சரித்துக் கொண்டிருந்தது.

'வழி, வழி, விலகிப்போங்கள்' அதிகாரத்துடன் கூறிய அந்தக் குரல் அவனைக் கனவுலகத்தினின்றும் கீழே கொணர்ந்து பூமியில் தள்ளியது. பின்புறமாகப் பக்கத்திலிருந்து உண்டான அதனைக் கேட்டு, அவன் திடுக்கிட்டு நகர்ந்து, சாலையின் ஓரத்தை அடைந்தான். அதற்குப் பிறகே அவன் தன்னை அவ்விதம் ஒதுங்கிப் போகும்படிச் சொன்னவர் யார் என்பதைத் திரும்பிப் பார்த்தான்,

நான்கு அடிமைகள் ஒரு பல்லக்கைச் சுமந்து வந்துகொண்டிருந்தனர். குடையையும் விசிறியையும் தனித்தனியே ஏந்திய வேறு இரண்டு அடிமைகள் பக்கத்துக்கு ஒருவராகப் பல்லக்கைப் பிடித்துக்கொண்டு ஓட்டமும் நடையுமாக வந்தனர். அந்த அடிமைகள் யாவரும் கறுப்பு நீக்ரோ ஜாதியினர். சுருண்ட மயிரையுடைய பரட்டைத் தலையும், தடித்த மூக்கும் பருத்த உதடும் கொண்டு விளங்கிய அவர்கள், பார்வைக்கு விகாரமாகத்தான் காணப்பட்டனர். அவர்கள் அணிந்திருந்த ஆபரணங்களும் உடுத்திருந்த உடையும் எவ்விதத்திலும் அவர்களை அழகுபடுத்துவனவாக இல்லை.

தமிழ்நாட்டு மூடுபல்லக்கைப் போலவே இருந்தது அந்தப் பல்லக்கு. ஆனால் அதற்குக் கதவுகள் இல்லை. அதற்குப் பதிலாக அந்த இடத்தில் மெல்லிய திரை தொங்கியிருந்தது. அப்போது அந்தத் திரை நன்றாக விலக்கப்பட்டிருந்தது. வீட்டினுள் அடைபட்டுக் கிடப்பதால் வெப்பம் தாங்காமல் சிறிது வெளிக்கிளம்பிக் காற்றுவாங்கி வரலாமென்று புறப்பட்டவர் தங்களைத் திரையிட்டு மறைத்துக்கொள்வாரோ?

பல்லக்கில் பெண் ஒருத்தி உட்கார்ந்திருந்தாள். அவளைக் கண்டவுடன் சாத்தன் அப்படியே பிரமித்து நின்றுவிட்டான். அவளுக்குப் பதினெட்டு அல்லது இருபது வயதிருக்கும். அவளைப் போன்ற எழில் வாய்ந்த பெண்ணை அவன் அதுவரையில் கண்டதில்லை பக்கத்தில் சென்ற நீக்ரோக்களின் விகார ரூபத்தால் அவளது அழகு அதிகச் சோபையுடன் விளங்கியதுபோலும்.

நாகனுக்கு அத்தகைய காட்சி புதிதன்று. அதைப்போல அவன் எத்தனையோ பார்த்திருக்கிறான். அதனால் அவன் அசட்டையாகவே சென்றான். ஆயினும் சிறிது தூரம் சென்ற பிறகு சாத்தன் உடன்வராததையறிந்து திரும்பிப்பார்த்தான்.

'ஏன் நிற்கிறாய்? பொழுது போய் விட்டது. வா, சீக்கிரம். திரும்பிப் போகலாம்' என்று அவனை துரிதப்படுத்தினான்.

ஆனால் சாத்தனோ நின்ற இடத்திலே வேரூன்றிப் போய் விட்டான். அவன் தன் உணர்வை இழந்து அசையவும் சக்தியற்றவனாக ஆகி விட்டான். விஷயத்தை அறிந்து கொள்வதற்கு நாகனுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

'என் அப்படிப் பார்க்கிறாய்? அந்தப் பெண்ணைத் தெரியுமா உனக்கு?' என்று கிண்டலாகக் கேட்டான் நாகன்.

சாத்தனுக்கோ அந்த விளையாட்டுப் பிடிக்கவில்லை. அது அவன் உள்ளத்தை ஈட்டியால் குத்துவதைப் போலத துன புறுத்தியது. அவள் யார், எங்கிருக்கிறாள் என்பன போன்ற விஷயங்களை அறிய அவன் மனம் ஏங்கியது. அன்றி, தன் உள்ளக் கிடக்கையை எளிதில் வெளியிட்டு விட்டோமே என்றும் வருந்தினான் அவன். அவளை மறுபடியும் சந்திப்போமா, அவளுடன் நெருங்கிப் பழகும் பாக்கியம் தனக்குக் கிடைக்குமா என்றெல்லாம் யோசித்தான் சாத்தன்.

சாலையுடன் போகும் பெண்ணொருத்தியைப் பார்த்துவிட்டு அவளைப் பற்றி ஒன்றுமே தெரியாமல் தான் இவ்விதம் இன்பக் கனவு காண்பது வீண் என்பது அவனுக்குத் தெரியாமல் இல்லை. ஆயினும் ஏதோ ஒன்று அவனை உறுத்தி வந்தது, 'நீ அவளை மறுபடியும் கட்டாயம் காண்பாய்' என்று.

யவனப் பெண்ணின் மையல் சாத்தனைப் பலமாகத் தாக்கிவிட்டது என்பதை நாகன் நன்றாக அறிந்து கொண்டான். ஆனால் அது பின்னால் எவ்வளவு தூரத்தில் வந்து முடியும் என்பதை ஒருவரும் அப்போது அறியவில்லை.

அது தான் சாத்தன் முதன் முறையாக அந்தோனியாவைப் பார்த்தது. அதே அந்தோனியா இப்போது தன் வரவை எதிர்நோக்கிக் காத்திருப்பாள் என்பதை நினைவுபடுத்திக் கொண்ட சாத்தனுக்கு உணர்ச்சி வேகம் வந்து விட்டது.

'சூர்யாஸ்தமனத்துக்குள் கரை சேர்ந்து நங்கூரம் பாய்ச்சிவிட வேண்டும்' என்று மீகாமனுக்கு உத்தரவிட்டான் அவன்.

சாத்தன் எப்படியாவது அன்றைப் பொழுதுக்குள் கரையை அடைந்து அவளை அடைய ஆசை கொண்டதில் அதிசயம் ஒன்றுமில்லை. ஆனால் நாம் நினைத்தபடியே எல்லாம் நடந்து விடுகின்றனவா? கடவுள் செயல் வேறாக வன்றோ இருக்கிறது.!

(தொடரும்)

கால் புண்கள் மூலம் கெடுதி ஏற்படும்படி விடாதீர்கள்

ஜாம்-பெக் வலியைப் போக்கி, மாயமாய் குணப்படுத்தும்.

ஜாம்-பெக் வலியைச் சமனப்படுத்தி, சிரங்கு, ரணம், கால் புண்களிலிருந்து சீழ் வடிதலைக் கண்டு ஆச்சரியமடைவீர்கள். ஜாம்-பெக் மெழுகை தடவி கட்டிவிடுங்கள் ஜாம்-பெக்கிலுள்ள அற்புத மூலிகை ஆயில் சுலபமாக சருமத்திற்குள் செல்லுகின்றது. வீக்கம், வலி குறைந்துவிடுகின்றது. ஜாம்பெக் தழும்பின்றி குணப்படுத்தும. ஜாம்-பெக் மெழுகு ரூ. 1 அவைது 2—4. ஸோப் ரூ. 1. பவுடர் ரூ. 1. ஏஜண்டுகள் :—மெஸர்ஸ் காதா அண்டு கம்பெனி, பி. டி., மதராஸ். எப்போழுதும் ஜாம்-பெக் உபயோகியுங்கள்.

ZAM-BUK

மிருகக் கொழுப்பற்றது.

சித்திரமும் சிருங்காரமும்.

பரோபகாரம்

பெட்டி கிராபிள் ஒரு யுவதிக்கு உபகாரம் புரிந்தது குறிப்பிடத்தக்கதாகும். ஸ்டுடியோவிலிருக்கும் காபிக் கடையில்காஷியர்வேலைபார்த்து வந்த பார்பரா கோல்மன் என்ற யுவதி விஷயத்தில் பெட்டி சிரத்தை எடுத்துக் கொண்டது காரணமாக, பார்பரா பெட்டிக்குப் பதிலாக சில சந்தர்ப்பங்களில் நடிக்கும் பொறுப்பு வாய்த்தது. முதலில் பெட்டி பார்பராவைத் தனக்குத் துணையாக எடுத்துக் கொண்டாள்: பார்பரா விஷயங்களைக் கிரஹித்துக்கொண்ட பின்பு, அவளைத் தனியாகப் படத்தில் நடிக்கவும் பெட்டி ஏற்பாடு செய்தாள். "தீவுகளின் கானம்" என்ற படத்தில் பார்பரா நடித்ததற்கு பெட்டி தான் காரணமானவள். இந்தப் படத்தில் பார்பராமிகத் திறமையுடன் நடித்ததால, மேலும் சில படங்களில் நடிக்க அவளுக்கு அழைப்பு அனுப்பப் படும் என்று கூறப்படுகிறது.

இதைப்பற்றி பெட்டி குறிப்பிட்டது பின் கண்டபடி: "இம் மாதிரி பிறரையுமமேலே தூக்கிவிடுவதுதான் சரி. என் விஷயத்தில் அநேகர் உதவியிருக்கின்றனர். நாம் பிறருக்கு ஒத்தாசை பண்ணக்கூடிய ஸ்திதியை எட்டிய பின்பு நாமும் மற்றவர்களுக்கு நம்மாலான அளவுக்கு சகாயம் புரிவது கடமையாகும்."

இதே மாதிரி டாரத்கி லாமூரும் தனது காரியதரிசிக்கு உதவி புரிந்தாள். முதலில அவள் நடிப்புத்தொழிலில் பயிற்சி பெற ஏற்பாடுகள் பண்ணி, பிறகு அவள் நன்கு நடிக்கவும் வழிகாட்டினாள்.

* * * *

ஸோஞ்ஜா ஹேனி

"ஸன் வேலி ஸிரனேட்" என்ற படத்தில் நடிப்பதற்கு முன்பு ஸோஞ்ஜா ஹேனி தனது எடையை மிகவும் குறைத்துக் கொண்டாள் என்பது ஸினிமா ரஸிகர்களுக்குத் தெரியும். எடை குறைந்தது காரணமாக அவளது கன்னம் முன்போலிராமல் ஒட்டிப்போய் விட்டது. இது அநேகருக்குத் திருப்திகரமாயில்லை. ஆகவே அவர்கள் யாவரும் மறுபடியும் ஸோஞ்ஜா பழையபடி இருக்க வேண்டுமென்று அவளுக்கு எழுதி வருகின்றனர். ஆகவே 20-ம் செஞ்சுரி பாக்ஸ் கம்பெனியாரின் "ஐஸ்லண்ட்" என்ற படத்தில் நடிப்பதற்கு முன்பு தனது எடை மேலும் 5 பவுண்டுகளுக்கு அதிகரிக்கும்படி ஸோஞ்ஜா செய்து கொள்வாள். "ஸன் வேலிஸிரனேட்" படப் பிடிப்பின்போது ஸோஞ்ஜா 108 பவுண்ட் எடை இருந்தாள். படத் தொழிலில் ஈடுபட்ட சமயம் அவளது எடை 135 பவுண்டுகள்; எடைக் குறைவு காரணமாக ஸோஞ்ஜா மெல்லிய தோற்றமுள்ளவளாகக் காணப்படுகிறாள். எடை அதிகரித்த பின்பும் ஒல்லியாகவே இருப்பதை ஸோஞ்ஜா பெரிதும் எதிர்பார்க்கிறாள்.

* * * *

தொடர்ந்து வருவது

"என் பள்ளத்தாக்கு எவ்வளவு பசுமையானது" என்பதற்குத் தொடர்ச்சியாக மேலும் ஒரு படத்தைத் தயாரிக்க டரில் ஸனுக் திட்டமிட்டிருக்கிறார். முதல் படத்தைப் பார்த்தவர்கள் யாவரும் அது எல்லா அம்சத்திலும் சிறப்புடன் சோபித்தது எனக் கூறியதே இந்த புதிய திட்டத்திற்குக் காரணமாகும்.

"என் பள்ளத்தாக்கு எவ்வளவு பசுமையானது" என்ற படத்தின் கதையை எழுதிய ரிச்சர்ட் லெவலின், அதற்குத் தொடர்ச்சியாக "பள்ளத்தாக்கு புருஷர்கள் "என்ற கதையையும் எழுதும்படிக் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார். இந்தப் புது கதையில் முக்கிய கதையின் சம்பவங்கள் தொடர்ந்து சித்திரிக்கப்படும். யுத்தாரம்பம் வரை இந்தக்கதை காட்டப் படும்,

முந்திய படத்தில் நடித்த வால்டர் பிட்ஜன், ஸாரா ஆல்குட், ரெட்டி. மக்டவால், மாரின் ஓஹாரா முதலியோரும் இந்த இரண்டாம் படத்திலும் நடிப்பார்கள் என்று நம்பப்படுகிறது. இந்தப் படத்தையும் ஸனுக் தான் நேரில் தயாரிப்பார்.

* * * *

புதிய படங்கள்.

ரபேல் ஸபாடனி என்ற பிரபல நவீன கர்த்தர் எழுதிய "கறுப்பு அன்னம்" என்ற கதை படம் பிடிக்கப்பட்டிருக்கிறது. இந்தப்படத்தில் டைரோன்பவர் நடிக்கிறார்: ஓஹாராவுக்கும் இதில் முக்கிய ஸ்தானம் அளிக்கப்பட்டிருக்கிறது. இதைத் தயாரிப்பவர் டரில் ஸனுக். லேர்ட் க்ரகருக்கும் இதில் இடம் தரப்பட்டிருக்கிறது; அவர் கொள்ளைக்காரத் தலைவனாக நடிப்பார்,

* * * *

"ஆலன் போ காதல்"

எட்கார் ஆலன்போ என்பவர் பிரபல அமெரிக்க ஆசிரியர். அநேகம் சிறு கதைகளை அவர் எழுதியுள்ளார். இருபதாம் செஞ்சுரி பாக்ஸ் கம்பெனிக்காக டைரக்டர் ஹாரி லக்மான் புதிய படமொன்றைத் தயாரித்திருக்கிறார். இந்தப் படத்தின்பெயர் "எட்கார் ஆலன் போ காதல்" என்பதாகும் இந்தப் படத்தில் ஜான் ஹேப்பர்டும் லிண்டா டார்னெலும் முக்கிய நடிகர்கள்; வர்ஜினியா கில்மோர் என்பவளுக்கும் இதில் பிரதான ஸ்தானம் வழங்கப் பட்டிருக்கிறது.

குட்டிக் கதை

மறு பிறப்பு!

★ "ரேவதி" எழுதியது

"நீ சொல்லரது விசித்திரமாகத்தான் இருக்கிறது!" தத்துவ சாஸ்திரம் படிப்பதின் பலன் இது தான்? உன் மூளை கலங்கி விட்டது" என்று சொல்லிப் பரிகாசமாக நகைத்தான் சுந்தரேசன்.

"வீணில் உன்னுடன் வாதாடி என்ன பிரயோஜனம்? என் அனுபவத்தில் நடந்த உண்மைக் கதை ஒன்று சொல்லுகிறேன். பிறகு நீ இப்படிப் பேச மாட்டாய்!" என்று ராமநாதன் படபடப்புடன் சொன்னபோது, இது வரையில் தற்கால நடிப்பைப் பற்றித் தர்க்கம் செய்து கொண்டிருந்த நண்பர்கள் ராமநாதன் பக்கம் திரும்பினார்கள்.

"என் அத்தை பெண் கமலா மேல் நாட்டு நூல்களை நன்கு அறிந்தவள். அவளுக்குத் தத்துவ சாஸ்திரத்தில் ஒரு தனிப் பிரீதி. அந்தப் பற்றி அவள் படிக்காத நூல்களே கிடையாது......"

ஒரு நாள் "குழந்தை, ஆசையாக உன்னையே உத்து உத்துப் பார்க்கிறது. அதைக்கூட கவனிக்காமல் இப்படிப் புஸ்தகத்தில் மூழ்கிக் கிடக்கிறாயே? அந்தப் புஸ்தகத்தை உன் கையில் கொடுத்தது தப்பு" என்று சொல்லி விளையாட்டாய் ராமநாதனின் கையில் இருந்த புஸ்தகத்தைப் பிடுங்கி, குழந்தையை அவன் மடிமேல் வைத்தாள் கமலா!

"கமலா, உன் குழந்தைக்கு என்னை அடையாளம் தெரியுமா, என்னை அன்புடன் பார்க்க! இன்னும் சரியாக முகம் பார்த்துக்கூட இதுக்குச் சிரிக்கத் தெரியலையே? வெரும் ஜடம்னு இது!" என்றான் ராமநாதன்.

"நீ தொட்டிலின் கிட்ட வரும் போதெல்லாம் அது உன்னைத் திரும்பித் திரும்பி பார்க்கிறது. போன ஜென்மத்தில் இந்தக் குழந்தை உன் பிராண சிநேகிதனாக இருந்திருக்கலாம். உன் அபிமானத்தைப் பெற்றவனாக இருந்திருக்கலாம். உன் அறிவு குழந்தைக்கு இருக்கு; உனக்குத் தான் புரிந்துகொள்ள முடியவில்லை!" என்று விளையாட்டாக ஆரம்பித்த கமலா, சற்று யோசனையுடனே முடித்தாள்.

"அப்படியானால் நமக்குத் தெரிந்த ஒரு ஆஸாமியா இந்தக் குழந்தை? முகத்தில் நாம் அடையாளம் கண்டுகொள்ளக்கூடிய ஒரு சின்னத்தையும் காணோமே? மூக்குத்தான் உன் அகமுடையான் மூக்குப் போல் சப்பையாக இருக்கு! உன்னைக் கொள்ளக்கூடாதோ!" என்று ராமநாதன் கேலி செய்தான்.

"போ, அம்மாஞ்சி!" என்று புன்னகை பூத்த முகத்துடன் சொன்ன கமலா, குழந்தையைத் தன் கையில் எடுத்துக் கொண்டாள். "எனக்கு என்னமோ ஒரு ஆத்மா, மறு ஜனனம் எடுக்கும் போது, தனக்குப் பழக்கமான குடும்பத்திலேயே தான் சாதாரணமாகப் பிறக்கிறது.' இந்த அறிவு, முதலில் குழந்தைக்கு இருக்கு: நமக்குத்தான் இது யார் என்பதை அறிந்து கொள்ள முடிவதில்லை; பிறகு வளர வளரக் குழந்தையும் மறந்து விடுகிறது என்றே நிச்சயமாகத் தோணுகிறது!" என்று குரலில் ஒரு தீவிர நம்பிக்கை தொனிக்க கமலா சொன்னாள்.

"நல்ல காலம், நமக்கும் தெரிகிறதில்லை; குழந்தைக்கும் சொல்ல முடியவில்லை. இல்லாவிட்டால் நமக்கு முற்றிலும் பிடிக்காத ஒரு ஆஸாமியின் ஆத்மாவாக இருந்து வச்சா நம்ப குழந்தை என்று அபிமானிப்பதா? பழைய வெறுப்பு முன் நிற்குமா யாரு கண்டது?" என்றான் ராமநாதன்.

"எந்த ஆத்மாவாக இருந்தால் என்ன? ஜன்ம வைரியாகத் தான் இருந்தால் என்ன? என் குழந்தை என்ற வாஞ்சை எங்கே போகும்? அபிமானித்துப் பாராட்டத்தான் செய்வோம்!" என்றாள் கமலா.

இதற்கு ராமநாதன் சம்மதப் படவில்லை. இருவருள்ளும் தர்க்கம் வலுத்தது. கடைசியில் இந்த ஆத்மா எதுவாக இருந்தாலும் சரி. நமக்குத் தெளிவாகத் தெரியட்டும். என் தாயுள்ளம் ஒரு நாளும் மாறாது!" என்று கமலா தீர்மானமாகச் சொல்லி, குழந்தையின் ஜன்ம ரகசியத்தை அறிபவள் போல் அதையே உற்றுநோக்கினாள். சட்டென்று ஒரு வித அசாதாரண நிசப்தம் அந்த அறையைச் சூழ்ந்தது. ராமநாதனும் தன்னையும் மறந்து, குழந்தையையே உற்று நோக்கினான்.

ராமநாதன் தான் காண்பது நிஜம்தானா என்று ஐயுற்றுத் தன் கண்களை இரு தரம் கொட்டினான். இவர்கள் ஒன்று விட்ட அத்தான் சுரேஷ் இரண்டு வருஷங்களுக்கு முன் ஒரு வேசி வீட்டில், உயிரை நீத்தவன்; அவன் குடியன், காமன், அவனைப் பற்றியே இவர்கள் பேசுவது கிடையாது. கமலாவுக்கு அவனைக் கண்டாலே பிடிக்காது!

குழந்தையின் களங்கமற்ற கண்கள் மூலம் சுரேஷின் ஆத்மா, உலக அறிவுடன் இவர்களைப் பார்த்து ஏளனமாகப் புன்னகை செய்தது!

கமலா "ஓ!" என்று அலறிக் குழந்தையைத் தொப்பென்று கீழே போட்டாள். அன்றைய நாள் முதல் அவளுக்கு சித்தஸ்வாதினம இல்லை.

"இப்பொழுது என்ன சொல்லுகிறாய்?" என்று ராமநாதன் சலிப்புடன் கேட்டான், கைக் குட்டையால் நெற்றியில் படிந்திருந்த வியர்வைத் துளிகளைத் துடைத்துக்கொண்டு, சன்னல் பக்கமாக முகத்தைத் திருப்பிக் கொண்டான் சுந்தரேசன்.